# சமூக அறிவியல் I

## வகுப்பு IX

SOCIAL SCIENCE I
STD 9
Tamil Medium

**பகுதி-1**

**Part-1**

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம்வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே,

சமூகத்தின் வளர்ச்சிப் பரிணாமங்களும் மனிதனின் பன்முக வளர்ச்சியும்தான் சமூக அறிவயலின் கற்றல் பாடங்கள் ஆகும். சமூக வாழ்க்கையையும் நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து உண்மையான பகுப்பாய்வு நடத்துவதற்காக சமூக அறிவியல் கற்றல் தேவைப்படுகிறது. இடம் பொருள் உணர்வும் பகுத்தறிவு சிந்தனையும் அறிவியல் கண்ணோட்டமும் வாழ்க்கையின் மதிப்புகளும் பரந்த நோக்கும் சமூகஅறிவியல் கற்றலின் வாயிலாக அடையவேண்டும். வரலாறும் அரசியல் அறிவியலும் சமூக அறிவியலோடு வேறுபடுகிறது எனினும் ஒருங்கிணைப்பின் வாய்ப்புகளும் மண்டலங்களும் கருத்தில் கொண்டு இப்பாடப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால உலகம், இந்தியா, கேரளம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கருத்துக்களை அளிப்பதற்கு வரலாற்றுப் பாடங்களுக்கு இயலுகிறது. உலகத்தின் மிகப் பெரிய மக்களாட்சி நாட்டின் குடிமகன் என்ற நிலையில் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவமும் தேவையும் அரசியல் அறிவியல் பாடங்களில் தெளிவுபடுத்தப்படுகிறது. சமூகப் பிரச்சினைகளும் அதற்குத் தீர்வுகாணும் முறைகளும் சமூகவியல் கற்றலின் பகுதியாக கூறப்பட்டுள்ளது.

வேற்றுமைகளுக்கு ஆதரவு வழங்கவும் சகிப்புத்தன்மையோடு நடந்து கொள்வதற்கும் மனிதன் உட்பட்ட அனைத்து உயிரினங்களோடும் சமநிலையைக் கைகொள்வதற்கும் சமூக அறிவியல் பாடப்புத்தகம் உங்களுக்குத் துணைபுரியும்.

வாழ்த்துக்களுடன்,

**முனைவர். பி. ஏ. பாத்திமா**
இயக்குநர்
எஸ். சி. இ. ஆர். டி.

# TEXT BOOK COMMITTEE

**Abdul Azees. V.P.,** VPKMMHSS Puthur, Pallikkal, Malappuram.

**Abhilashkumar. K.G.,** Devadar Govt. HSS, Tanur, Malappuram.

**Amar.** HSS Mattannur, Kannur.

**Jayakrishnan. O.K.,** KPCHSS, Pattanoor, Kannur.

**Jothishkumar. B.,** MGHSS, Edathara, Pathanapuram, Kollam.

**Pradeepan. T.,** GHSS, Kallachi, Kozhikkode.

**Faizal. V.,** GVHSS Parayancheri, Kozhikkode.

**Prasad. V.,** GGHSS, Kadammanitta, Pathanamthitta.

**Muralidharan Nair** NSSHSS, Anikkad, Kottayam.

**Mohammed Musthafa** DPO, Malappuram.

**Yoosuf kumar. S.M.,** Govt. Model Boys HSS, Attingal, Thiruvananthapuram.

**Ratnakaran. T.,** GBHSS, Malappuram.

**Haripradeep. S.,** SVHS, Pullad, Thiruvalla, Pathanamthitta.

**Chithra Madhavan,** Research Officer, SCERT

**Yahiya. P.,** GGMGHSS, Chalappuram, Kozhikkode. (Proof Reading)

## Experts

**Dr. Abdul Razak. P.P.,** Asst. Prof., Dept. of History, PSMO College, Thirurangadi, Malappuram.

**Dr. B. Shobhanan.** Head, Dept.of History (Rtd) Kerala University.

**Dr. N.P. Hafis Mohammed.,** Co-ordinator, Sociology Dept. Calicut University.

**Dr. Vijayalakshmi.,** Head, Dept.of History (Rtd) NSS College, Manjeri, Malappuram.

**Dr. V. Kunhali.,** Head, Dept.of History (Rtd) Calicut University.

**Dr. K.P. Rajesh.,** NSS College, Manjeri, Malappuram.

**Dr. Saidalavi.,** Malayalam University, Tirur, Malappuram.

**Acadamic Co-Ordinator**

**Manoj .K.V.,** Research Officer, SCERT

## TAMIL VERSION

**S. Padmakumar.** HSA, GHS Koovakkadu, Kollam

**Dr. Nisha Raffi** Asst. Prof. in Tamil, University College, Palayam, TVM.

**Mary Stella Rosaline. K.** HSA (Rtd), GGHSS, Karamana,TVM.

**Acadamic Co-Ordinator**

**Dr. D. Sahayadhas** Research Officer SCERT

State Council of Educational Research and Training (SCERT)
Vidyabhavan, Poojappura, Thiruvananthapuram. 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | இடைக்கால உலகம்: அதிகார மையங்கள் | 09 |
| 02 | கிழக்கும் மேற்கும்: பரிமாற்றங்களின் காலகட்டம் | 23 |
| 03 | இந்திய அரசியலமைப்பு: உரிமைகளும் கடமைகளும் | 39 |
| 04 | இடைக்கால இந்தியா : அரச கட்டளையும் ஆட்சிமுறையும் | 53 |
| 05 | செல்வமும் சமூகமும் | 69 |

## இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்கு சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன



கூடுதல் வாசிப்பதற்கு- மதிப்பீடு செய்வதற்கு சேர்க்க வேண்டாம்



கற்றல் மேம்பாட்டைத் தீர்மானிக்கும் வினாக்கள்



செயல்பாடுகள்



முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை



மதிப்பீடு செய்வோம்



தொடர் செயல்பாடுகள்

# பாட நூலைப் பற்றி

**வ**ரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் போன்றவைகளின் பகுதியாக ஒன்பது அலகுகள் சமூக அறிவியல் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பாடப் பகுதியில் ஆறு அலகுகளும், அரசியல் அறிவியலில் இரண்டு அலகுகளும், சமூகவியலில் ஓர் அலகும் ஆகும்.

தொடர்ச்சியும், வளர்ச்சியும் உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்றுப் பாடப்பகுதிகள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. ஆறாம் வகுப்பில் கொடுக்கப்பட்ட இடைக்கால உலகத்தின் தகவல்களை விட மேம்பட்ட விதத்தில் தகவல்களுக்கும் கருத்துக்களுக்கும் அவற்றின் பகுப்பாய்விற்கும் இங்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. "தீம்மேட்டிக்" அணுகுமுறையின் அடிப்படையில் வரலாற்று செயல்முறையை ஒருங்கிணைத்து வெளியிட முயற்சிக்கப்பட்டுள்ளது. இடைக்கால உலகம், இடைக்கால இந்தியா, இடைக்கால கேரளம் என இடைக்கால வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் தெளிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**இடைக்கால உலகம் அதிகார மையங்கள்** என்ற அலகில் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்ட வேறுபாடான அதிகார மையங்களைப் பற்றி கலந்துரையாடப்படுகிறது. பல்வேறு கண்டங்களிலாக பரவிக் கிடக்கும் வேறுபட்ட அதிகார அமைப்புகள் ஒரு அலகின் வாயிலாக விளக்கப்படுகிறது. ஐரோப்பாவை மையமாகக் கொண்ட இடைக்கால பகுப்பாய்வு முறைகளிலிருந்து வேறுபட்டு இடைக்கால உலகத்தின் வெவ்வேறு துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்கிக் கூற முயற்சிக்கப்பட்டுள்ளது.

**கிழக்கும் மேற்கும்: பரிமாற்றங்களின் காலம்** என்ற அலகில் வாணிபத்தின் வளர்ச்சியும் நகரமயமாக்கலும் இடைக்காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய நாகரீக முன்னேற்றமும் விளக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களால் இருண்ட காலம் எனக் குறிப்பிடப்பட்ட இடைக்கால உலகத்தின் ஒளி வீசுகின்ற தன்மை இதன் வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகிறது.

தொடர்ந்து மூன்று அலகுகளிலாக இடைக்கால இந்தியாவின் விரிவான வரலாறு விளக்கப்பட்டுள்ளது. தானேஸ்வரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி நடத்தின. வர்த்தனப் பேரரசு வரையுள்ள இந்திய வரலாறை நாம் எட்டாம் வகுப்பில் கலந்துரையாடினோம். வர்த்தனப் பேரரசைத் தொடர்ந்து அனேகம் நாட்டரசுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உயர்ந்து வந்தன. அவர்கள் பாலன்மார்கள்,

ப்ரதிகரன், ராஷ்டிரகூடர்கள், சாளுக்கியர், இராஜபுத்திரர் போன்றோராவர். சில நாட்டரசுகள் வலிமைமிக்கதாக இருந்தது எனினும் நாட்டரசின் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதில் இவர்கள் வெற்றிபெறவில்லை. அதனால் மையப்படுத்தப்பட்ட ஆட்சியை நிறுவுவதற்கோ எல்லைகளை விரிவுபடுத்தி ஒரு பேரரசை கட்டி எழுப்பவோ அவர்களால் இயலவில்லை. பின்னர் இந்தியாவில் ஸல்தனத் - மொகலாய காலகட்டத்தில் வலிமைமிக்க மையப்படுத்தப்பட்ட ஆட்சி உருவானது. தென் இந்தியாவில் இக்காலகட்டத்தில் சோழர் விஜயநகர ஆட்சியும் மராத்திய ஆட்சி அமைப்பும் வளர்ந்து வந்தன. இடைக்கால இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு ஆரம்பம் குறித்த பதிமூன்றாம் நூற்றாண்டு முதலுள்ள அரசியல், சமூக, பொருளாதார வரலாறு இடைக்கால வரலாற்றின் பகுதியாக இப்பாடப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

**இடைக்கால இந்தியா-அரச கட்டளையும் ஆட்சிமுறையும்** என்ற அலகில் இடைக்கால இந்தியாவின் ஆட்சித் துறையின் சாதனைகளும் அதன் தனித்தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளது.

**செல்வமும் சமூகமும்** இடைக்கால இந்தியாவின் பொருளாதார- சமூக வளர்ச்சியைக் குறிப்பிட முயற்சித்துள்ளது.

இடைக்கால இந்தியாவின் நாகரீக ஒற்றுமையை **ஒற்றுமையின் இந்தியா** விவாதிக்கிறது. கொள்கைகளின் ஒருங்கிணைப்பும் முன்கால முக்கிய உறவுகளும் பொது இடங்கள் தோன்றியது எவ்வாறென்றும் இந்த அலகு விளக்குகிறது.

இடைக்கால கேரளத்தில் முழுமையான வாழ்க்கை வரலாறும், நவீன காலகட்டத்தின் முக்கியத்துவத்தை **கேரளம் எட்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை** விளக்குகிறது.

தொடர்ந்து இரண்டு அலகுகளின் வாயிலாக அரசியல் அறிவியலின் சில முக்கிய மண்டலங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**இந்தியா அரசியலமைப்பு: உரிமைகளும் கடமைகளும்** என்ற அலகில் அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகளும் அரசு நெறிமுறை கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் விளக்கப்படுகிறது.

ஜனநாயக முறையிலான தேர்தல்களின் முக்கியத்துவமும் தேவையும் வெவ்வேறு தேர்தல் முறைகளும் **தேர்தலும் மக்களாட்சியும்** விவாதிக்கிறது.

சமூகவியலின் முக்கிய மண்டலங்களில் ஒன்றாக வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளும் தீர்வுகளும் **நல்ல நாளைக்காக** என்ற அலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அலகு

01



# இடைக்கால உலகம் : அதிகார மையங்கள்

" மொத்த உலக்திலும் நாகரீகம் வளர்ந்து கொண்டேயிருந்த ஒரு காலமே இடைக்காலம். இடைக்கால வாழ்க்கையினுடையவும் அது உருவாக்கிய பொருளாதார மாற்றங்களினுடையவும் சிறப்பம்சங்களே பதினாறாம் நூற்றாண்டின் புரட்சிகளுக்குக் காரணமாகியது."

**ஜெ. டி. பர்ணல்**

**சாஸ்த்ரம் சரித்திரத்தில் (தொகுதி 1, பக்கம் 303 - 305)**

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றைக் கவனியுங்கள். இது எதைக் குறிப்பிடுகிறது? இடைக்கால உலகத்தைப் பற்றி முன் வகுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? இடைக்கால உலகத்தின் சிறப்பம்சங்கள் யாவை? கலந்துரையாடவும்.

C. E ஐந்தாம் நூற்றாண்டு முதல் C. E பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான காலத்தை இடைக்காலம் என்கிறோம். ஆனால் உலகின் அனைத்து பகுதிகளிலும் இடைக்காலம் ஒரே காலயளவில் இருக்கவில்லை. இடைக்கால உலகத்தின் அமைப்பு சமமாகக் காணப்பட்டாலும் அதிகார அமைப்புகளில் வேறுபாடுகள் காணப்பட்டது. ஐரோப்பா, ஆசியா, ஆப்ரிக்கா, அமெரிக்கா போன்ற இடங்களில் பல காலங்களிலாக வேறுபட்ட அதிகார அமைப்புகள் நிலைபெற்றிருந்தன. அவை எவையென ஆய்வு செய்யலாம்.

# கிழக்கத்திய ரோமப் பேரரசு

பழங்காலப் பேரரசுகளில் பரப்பளவு அதிகமான ரோமப் பேரரசைப் பற்றி படித்தீர்களல்லவா? பேரரசின் பரப்பு ஆட்சியில் சிக்கலை ஏற்படுத்திய போது C.E நான்காம் நூற்றாண்டில் டயோக்லிஷியன் என்ற ரோமப் பேரரசர் ரோமப் பேரரசை இரண்டாகப் பிரித்தார். அவ்வாறு ரோமை மையமாகக் கொண்டு மேற்கத்திய ரோமப் பேரரசும் கான்ஸ் டாண்டிநோபிளை மையமாகக் கொண்டு கிழக்கத்திய ரோமப் பேரரசும் தோற்றுவிக்கப்பட்டது. முன்னர் கான்ஸ்டாண்டிநோபிள் பைசாண்டியம் என்ற பெயரில் அறியப்பட்டிருந்தது. அதனால் கிழக்கத்திய ரோமப் பேரரசு பைசாண்டியப் பேரரசு எனவும் அழைக்கப்பட்டிருந்தது.




கிழக்கத்திய ரோமப் பேரரசு



கிழக்கத்திய ரோமப் பேரரசின் நிலப்படத்தை ஆய்வு செய்து மேற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ஆப்ரிக்காவிலும் எந்தெந்தப் பகுதிகளில் அது உட்பட்டிருந்தது எனக் கண்டுபிடிக்கவும். தற்போது அப்பகுதிகள் எந்தெந்த நாடுகளின் பகுதியாகும்? பட்டியல் தயாரிக்கவும்



### வரலாற்றின் காலப்பிரிவு

உலக வரலாற்றின் காலப்பிரிவு ரோமப் பேரரசின் அடிப்படையிலாகும். மனிதனின் தோற்றம் முதல் மேற்கத்திய ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்த C.E 476 வரையிலான நிகழ்வுகள் தான் பழங்காலத்தில் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து கிழக்கத்திய ரோமப் பேரரசின் வீழ்ச்சி வரை (C.E 1453) இடைக்காலமாகவும் கருதப்படுகிறது. நவீன காலத்தின் துவக்கம் 1453 முதலாகும்.



### கான்ஸ்டாண்டி நோபிள்

மத்தியதரைக் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடைப்பட்ட தந்திர முக்கியத்துவமான போஸ்போறஸ் கடலிடுக்கில் கான்ஸ்டாண்டிநோபிள் அமைந்துள்ளது. ரோமப் பேரரசரான கான்ஸ்டன்டைனின் பெயரில் இந்நகரம் அறியப்பட்டிருந்தது. ஆட்டோமன் துருக்கியர்களின் ஆட்சிக் காலத்திலும் கான்ஸ்டாண்டிநோபிள் தலைநகரமாயிருந்தது. கலை, வாஸ்துக்கலை போன்றவற்றின் மையமாகவும் கான்ஸ்டாண்டி நோபிள் அமைந்திருந்தது. அது தற்போது இஸ்தாம்புள் என அழைக்கப்படுகிறது.

"வரலாறு நீதிபூர்வமாக ஜஸ்ட்டினியனின் போர்களை மறந்து அவரது சட்டங்களின் பெயரால் அவரை நினைவு கூறவும் செய்யும்"

**ஸ்டோறி ஆஃப் சிவிலைசேஷன், வில் டூரன்ட்**



ஜஸ்'ட்டினியன்

கிழக்கத்திய ரோமப் பேரரசின் பிரபலமான பேரரசராக ஜஸ்ட்டினியன் கருதப்படுகிறார். ரோமின் சட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து கோர்ப்பஸ் ஜூறிஸ் சிவில்ஸ் என்ற ஒரு சட்டத்தொகுப்பு உருவாக்கியது அவரது முக்கியமான சாதனையாகும். பகுத்தறிவு, நீதி, தாராளம் என்ற கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டதே ஜஸ்ட்டினியனின் சட்டத் தொகுப்பு. பல நாடுகளும் சட்டங்களை உருவாக்குவதற்கு இதைப் பயன்படுத்தினர் பிரெஞ்சு மன்னராக இருந்த நெப்போலியனின் சட்டத் தொகுப்பிற்கும் அடிப்படையானது ஜஸ்ட்டினியனின் சட்டங்களாகும்.






மேலே கொடுக்கப்பட்ட மேற்கோளையும் வரைபடத்தையும் உற்று நோக்கவும். ஜஸ்ட்டினியனின் சட்டங்களின் தனித்தன்மைகள் யாவை? கலந்துரையாடவும்.

ஜஸ்ட்டினியனின் ஆட்சிக்குப் பின்னர் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டில் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியதோடு கிழக்கத்திய ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

## புனித ரோமப் பேரரசு

ரோமை மையமாகக் கொண்ட ரோமப் பேரரசைப் பற்றி புரிந்துகொண்டீர்களல்லவா? இப்பேரரசு வெளிநாட்டவர்களின் படையெடுப்பால் அழிந்தது. ரோமப் பேரரசின் பகுதியாக இருந்த பிரதேசங்களை ஆக்கிரமிப்புக்காரர்கள் கைப்பற்றினர். அவர்களில் ஒரு பிரிவினர் ஃபிராங்குகள் ஆவர். ஃபிராங்குகள் நிறுவிய பேரரசு ஃபிராங்கிஷ் பேரரசாகும். ஃபிராங்கிஷ் பேரரசின் புகழ்பெற்ற பேரரசர் கரோலின்ஜியன் வம்சத்தைச் சேர்ந்த ஷாலமீன் ஆவார்.




புனித ரோமப் பேரரசு

கிழக்கத்திய ரோமப் பேரரசை விட பெரியதாக ஷாலமீனின் பேரரசு காணப்பட்டது. கத்தோலிக்க மதத்தலைவரான போப்பாண்டவர் மூன்றாம் லியோவை லொம்பார்டிகளின் தாக்குதலிலிருந்து ஷாலமீன் காப்பாற்றினார். இதற்குக் கைமாறாக ஷாலமீனைப் புனித ரோமப் பேரரசராகப் போப்பாண்டவர் அரியணையேற்றினார். அதைத் தொடர்ந்து இப் பேரரசு புனித ரோமப் பேரரசு என அழைக்கப்பட்டது.


உலகப் படத்தை ஆய்வு செய்து இன்று ஐரோப்பாவில் காணப்படும் எந்தெந்த நாடுகள் புனித ரோமப் பேரரசில் உட்பட்டிருந்தது எனப் பட்டியல் படுத்தவும்.


ஷாலமீன்

சிறந்த போர்வீரனும் திறன்வாய்ந்த ஆட்சியாளருமாக ஷாலமீன் திகழ்ந்தார். மேற்கு ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளை அவர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். அரசியல் கூட்டணிகளின் மூலமாகவும் திருமண உறவுகள் மூலமாகவும் அவர் பேரரசை விரிவுபடுத்தினார். பேரரசில் மையப்படுத்தப்பட்ட ஆட்சியைக் கொண்டு வந்தார். வட்டார ஆட்சியின் பொறுப்பைக் கௌண்டிகள் என அறியப்பட்ட அலுவலர்களிடம் வழங்கினார். கௌண்டிகளின் செயல் பாட்டைக் கண்காணிப்பதற்காக மிசை டொமினிஸி என்ற இரகசியப் பிரிவினரை நியமித்தார். ஏழை மக்களுக்காக நிவாரண நிதிகளை ஆரம்பித்தார். ஷாலமீனின் தலைமையில் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உருவான விஞ்ஞானப் புனரமைப்பு கரோலின்ஜியன் மறுமலர்ச்சி என அறியப்படுகிறது.

## அரேபியப் பேரரசு



அரேபியப் பேரரசு

ஈராக், ஈரான், சவுதி அரேபியா போன்ற நாடுகள் உட்பட்டிருந்த பகுதிகள் ஆரம்பகாலத்தில் அரேபியா என்ற பெயரில் அறியப்பட்டிருந்தது. இடைக் கால உலகில் சிறப்பான நன்கொடை களை வழங்கியவர்களே அரேபியர் கள். கலாச்சாரத்திற்கு அவர்கள் வழங்கிய நன்கொடைகளைப் பற்றி முன் வகுப்புகளில் கலந்துரையாடி னோம் அல்லவா? அரசியல் துறை யிலும் அரேபியர்கள் ஏராள மான நன்கொடைகளை வழங்கினர். இஸ்லாம் மத இறை தூதரான முகமது அரேபிய நாட்டின் தலைவனாகவும் இருந்தார். C.E 632-ல் இறை தூதர் முகமதின் மரணத்திற்குப் பின்னர் கலீபாக்கள் அரேபியாவில் ஆட்சி நடத்தினர். கலீபாக்களின் காலத்தில் ஆசிய மைனர் முதல்

அரபிக்கடல் வரையிலான பரந்த பகுதிகள் அரேபியப் பேரரசின் பகுதியானது. மதீனா ஆட்சி மையமாக இருந்தது. ஆரம்ப கால கலீபாக்களுக்குப் பின்னர் உமவிய்யா வம்சம் அரேபியாவில் ஆட்சி நடத்தியது. தமாஸ்கஸை மையமாகக் கொண்டு ஆட்சி புரிந்த இவர்களது காலத்தில் அரேபியாவில் மையப் படுத்தப்பட்ட ஆட்சி ஆரம்பித்தது. தங்க நாணயமான தினாரும் வெள்ளி நாணயமான தீர்கமும் அரேபியாவில் வெளியிட் டது உமவிய்யாவின் ஆட்சிக் காலத்திலாகும். பின்னர் அப்பாசியர்களின் ஆட்சிக்காலத்தில் தலைநகரம் பாக்தாதிற்கு மாற்றப்பட்டது.

## ஆரம்ப கால கலீபாக்கள்

- அபுபக்கர் (632 - 634)
- உமர் (634 - 644)
- உஸ்மான் (644 - 656)
- அலி (656 - 661)

## பாக்தாத்

பாக்தாத் டைக்ரீஸ் நதிக்கரையில் அமைந்துள்ளது. ஆயிரத்து ஓர் இரவுகள் இந்நகரத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். உலகிலேயே மிகவும் பெரியதும் செல்வச் செழிப்பானதுமான நகரமாக பாக்தாத் ஆயிரத்து ஓர் இரவுகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது. உலகப் புகழ் பெற்றதான வளர்ச்சியடைந்த பாக்தாத் பல் கலைக்கழகம் அப்பாசிய அரண்மனை போன்றவை இங்கு தான் அமைந்துள்ளது. மங்கோலியரான திமூறும் ஆட்டோமன் ஆட்சி அதிகாரியான சுலைமானும் பாக்தாத்தைக் கைப்பற்றியிருந்தனர். மங்கோலியர்கள் பாக்தாத்தைத் தாக்கும்போது பாக்தாத் நகரத்தில் மட்டும் 36 பொது நூலகங்கள் காணப்பட்டது எனக் கூறப்படுகிறது. அக்காலத்தைய கலாச்சார மையமாக பாக்தாத் விளங்கியது.

## இறை தூதரான முகமது

C.E 571-இல் மக்காவில் குரைசி கோத்திரத்தில் முகமது பிறந்தார். இஸ்லாமின் புனித நகரம் என மக்கா அறியப்படுகிறது. மக்காவின் உயர்குடியினரின் எதிர்ப்பைத் தொடர்ந்து C.E 622-இல் முகமது நபி மதீனாவுக்கு குடிபெயர்ந்தார். இது ஹிஜ்ரா என அறியப்படுகிறது. இந்த நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு தான் ஹிஜ்ரா வருடம் ஆரம்பமானது.

அரேபியாவின் நிலப்படத்தை ஆய்வு செய்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களின் அமைவிடத்தைக் கண்டுபிடிக்கவும் அவை தற்போது எந்தெந்த நாடுகளில் அமைந்துள்ளது?

- மக்கா
- மதீனா
- தமாஸ்கஸ்
- பாக்தாத்

அப்பாசிய ஆட்சியாளர்களில் தலைசிறந்தவர் ஹாருண்-அல்-றஷீது ஆவார். மக்கள் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டவரான ஹாருண்-அல்-றஷீது ஏராளமான வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். அரேபியாவில் முதன்முதலாக மருத்துவமனைகள் நிறுவப்பட்டது அவரது காலத்திலாகும். நீதிநியாய ஆட்சி இஸ்லாம் மதத்தின் நம்பிக்கைக்கு உட்பட்டதும் சட்டவிதிகளுக்குக் கட்டுப்பட்டதுமாகக் காணப்பட்டது. பேரரசின் எந்தப் பகுதிக்கும் மக்களுக்குப் பயமின்றி பயணம் செய்யலாம். புனித ரோமப் பேரரசுடன் நல்லுறவு கொண்டிருந்த ஹாருண்-அல்-றஷீது ஷாலமீனின் அரண்மனைக்குப் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார்.

இடைக்கால உலகத்தின் ஆட்சியாளர்களில் ஹாருண்-அல்-றஷீது பேறுபட்டவராகக் காணப்பட்டார் எனக் கூறப்படுவதன் காரணம் என்ன?

## ஆட்டோமன் பேரரசு



ஆட்டோமன் பேரரசு

கிழக்கத்திய ரோமப் பேரரசின் வீழ்ச்சியின் காரணம் எதுவாக இருந்தது? C.E 1453-இல் துருக்கியின் தலைவரான இரண்டாம் முகமது கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியதோடு ஆட்டோமன் பேரரசு வலுவடைந்தது. அத்துடன் கிழக்கத்திய ரோமப் பேரரசின் பகுதியாக இருந்த பல பிரதேசங்களும் ஆட்டோமன் பேரரசின் பகுதியானது. ஆட்டோமன் பேரரசு மிகுந்த செல்வாக்கைப் பெற்றது சுலைமானின் ஆட்சிக்காலத்திலாகும். சுலைமானை அல்குனானி (சட்டத் தலைவர்) என அழைத்தனர். அவர் ஆட்டோமன் சட்டங்களை ஒருங்கிணைத்தார். பேரரசில் மையப்படுத்தப்பட்ட ஆட்சிக்குத் தலைமை தாங்கினார். இக்காலத்தில் ஐரோப்பாவின் பல பகுதிகளும் ஆட்டோமன் பேரரசின் பகுதிகளாயின. ஆசியாவின் போர்த் திறமையைப் பற்றி ஆட்டோமன் ஆட்சியாளர்களின் வாயிலாக ஐரோப்பியர்கள் புரிந்துகொண்டனர். முதல் உலகப் போருக்குப் பின்னர் ஆட்டோமன் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

### ஆட்டோமன் பேரரசு

துருக்கி கோத்திரங்களில் ஒன்றின் தலைவராக இருந்த உஸ்மான், பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்டோமன் பேரரசை நிறுவினார் எனக் கருதப்படுகிறது. உதுமான் என அறியப்பட்ட அவரது பெயரிலிருந்து தான் ஆட்டோமன் என்ற பெயர் தோன்றியது.

நிலப்படத்தை ஆய்வு செய்து உலகின் எந்தெந்தப் பகுதிகள் ஆட்டோமன் பேரரசின் பகுதியாக இருந்தது எனக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்..

## மங்கோலியப் பேரரசு

மத்திய ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ள பகுதியே மங்கோலியா. இது பரவலான புல்வெளிகளும் பாலைவனமும் மலைகளும் நிறைந்த பகுதியாகும். கோடைக்காலத்தில் அதிகமான வெப்பமும் குளிர்காலத்தில் அதிகமான குளிரும்

மங்கோலியாவின் காலநிலையாகும். மங்கோலியர்கள் நாடோடிகளைப் போல் கூடாரங்களில் வாழ்ந்திருந்தனர். குதிரைகளின் மீது ஏறி நாட்டைச் சுற்றி நடந்த பல்வேறு மங்கோலியக் கோத்திரங் களை ஒன்றிணைத்து செங்கிஸ்கான் மங்கோலியப் பேரரசை நிறுவினார். செங்கிஸ்கானின் ஆட்சி மையம் சைபீரி யாவின் ஒனோண் நதிக்கரையிலுள்ள காரகோரமாக இருந்தது.



*மங்கோலியப் பேரரசு*

நிலப்படத்தை ஆய்வு செய்து மங்கோலியரின் பேரரசு எந்தெந்தக் கண்டங்களிலாகப் பரவியிருந்தது எனக் கண்டுபிடிக்கவும்.



மங்கோலிய இராணுவத்தின் முக்கியமான சிறப்பம்சம் வலிமையான குதிரைப் படையாகும். செங்கிஸ்கான் இராணுவத்தை பத்தின் மடங்குகளாக (10, 100, 1000, 10000) ஒழுங்குபடுத்தியிருந்தார். குதிரையின் மேல் வீற்றிருந்து இயக்கக்கூடிய சிறிய பீரங்கிகள் இராணுவத்தின் முக்கிய சிறப்பம்சமாக இருந்தது. ஒன்றிணைந்த ஒற்றர்படையும் செங்கிஸ்கானிடம் காணப்பட்டது.

தூர தேசங்களிலுள்ளவர்களோடு கொள்கைப் பரிமாற்றத்திற்காக நாம் எந்தெந்த முறைகளை இன்று பயன்படுத்துகிறோம். பேரரசின் பகுதியான தொலைதூரப் பிரதேசங்களைத் தலைமை இடத்தோடு தொடர்புபடுத்த மங்கோலியர்கள் சிறப்பான தபால் முறையை நடைமுறைப்படுத்தியிருந்தனர். குதிரைக்களைப் பயன்படுத்தியிருந்த இந்தக் கொள்கைப் பரிமாற்ற முறை கொரியர் என அறியப்பட்டது. அதிவேகமானதும் பொறுப்பானதுமாக செங்கிஸ்கானின் கொரியர் முறை காணப்பட்டது.


*செங்கிஸ்கானின் சிலை*
*மங்கோலியா*

## திமூர்



சமர்கட்டை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த ஆட்சியாளரே திமூர் ஆவர். பேரரசைத் தோற்றுவித்த செங்கிஸ்கானின் மருமகன் தான் திமூர். போரில் காலில் காயம்பட்ட திமூர் டாமர் லையின் (முடவரான திமூர்) என அழைக்கப்பட்டார். 1398-இல் சிந்து நதியைக் கடந்து டில்லியை அடைந்த திமூர் பெரும் செல்வத்துடன் திரும்பிச் சென்றார்.



நவீன உலகத்திற்கு மாதிரியான எந்தெந்த ஆட்சிச் சீர்திருத்தங்களைச் செங்கிஸ்கான் நடைமுறைப்படுத்தினார். அதன் தனித்தன்மைகளை உட்படுத்தி குறிப்பு தயாரிக்கவும்

# மாலிப்பேரரசு




மாலிப்பேரரசு



## திம்புக்து

இடைக்கால ஆப்ரிக்காவின் முக்கியமான கலாச்சார மையமும் வியாபார மையமுமாகத் திகழ்ந்த நகரமே திம்புக்து. வெனீஸ், இரானடா, ஜனோவா போன்ற இடங்களிலிருந்து வியாபாரிகள் தங்கம், யானைத் தந்தம் போன்றவற்றின் வியாபாரத்திற்காக திம்புக்துவிற்கு வந்திருந்தனர். அடிமை வியாபாரத்தின் முக்கியமான மையமாகவும் திம்புக்து திகழ்ந்திருந்தது. திம்புக்துவில் அமைந்திருந்த பல்கலைக்கழகம் இடைக்கால உலகின் முக்கியமான அறிவியல் மையமாகக் காணப்பட்டது. ஐரோப்பாவிலிருந்துகூட மாணவர்கள் இங்கு வந்திருந்தனர். கங்கன் மூஸா கட்டிய திம்புக்துவிலுள்ள பெரிய மசூதி இடைக்கால உலகத்தின் முக்கியமான இஸ்லாமியக் கல்வி மையமாக இருந்தது.

இடைக்கால ஆப்ரிக்காவில் காணப்பட்ட பிரபலமான பேரரசுகளில் ஒன்றே மாலிப் பேரரசு. மேற்கு ஆப்ரிக்காவில் மாலி ஆட்சி மையமாகக் காணப்பட்டது. கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தை ஆய்வுசெய்து ஆப்ரிக்காவின் எந்தெந்தப் பகுதிகளிலாக மாலிப் பேரரசு பரவியிருந்தது எனக் கண்டுபிடிக்கவும். மேற்கத்திய நாடுகளின் குறிப்புகளிலிருந்து மன்ஸ மௌஸ என அறியப்படுகின்ற கங்கன் மூஸாவை இடைக்கால ஆப்ரிக்காவின் பிரபலமான ஆட்சியாளராகக் கருதியிருந்தனர். அதிக அளவு தங்கத்தைச் சேமித்து வைத்திருந்த மாலி எக்காலத்தையும் செல்வம் மிகுந்த நாடாகக் காணப்பட்டது. இடைக்காலத்தின் முக்கியமான நகரங்களில் ஒன்றான திம்புக்து உட்பட சுமார் 400 நகரங்கள் அக்காலத்தில் மாலிப் பேரரசில் காணப்பட்டது.



ஆப்ரிக்கா இருண்ட கண்டமா? மாலிப் பேரரசை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் நடத்தவும்.

## மக்காவுக்கான பயணம்



1324-இல் கங்கன் மூஸா மக்காவுக்குச் சென்ற புனிதப்பயணம் உலகப் புகழ்பெற்றதாகும். பல கிலோகிராம் தங்கக் கட்டிகளுமாக அவரும் குழுவினரும் பயணம் ஆரம்பித்தனர். பயணத்தின் இடையே கண்ட ஏழைகளுக்கும் மசூதிகளுக்கும் புனித யாத்திரிகர்களுக்கும் தங்கத்தை இனாமாக வழங்கினார். மாலிப் பேரரசிற்கு ஆசிரியர்களையும் மதகுருக்களையும் அழைப்பதையும் அவர்தம் பயணத்தின் நோக்கமாகக் கொண்டார். இடைக்கால உலகத்தின் மிகவும் செல்வம் நிறைந்த ஆட்சியாளராக கங்கன் மூஸாவை இப்னுபத்தூத்தா சிறப்பித்துக் கூறுகிறார்.

# சீனாவும் ஜப்பானும்

உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு எது? உதய சூரியனின் நாடு என அறியப்படும் நாடு எது?

நிலப்படத்திலிருந்து இந்த நாடுகளைக் கண்டுபிடிக்கவும். அந்நாடுகளின் என்னென்ன தனித்தன்மைகள் உங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. கலந்துரையாடல் செய்து அட்டவணைப்படுத்தவும்.




*தொலை தூரக் கிழக்குப் பகுதிகள்*

இடைக்காலத்தின் ஆரம்பக் கட்டத்தில் சீனாவை டாங் அரசவம்சம் ஆட்சி செய்திருந்தது. நாட்டின் பரமாதிகாரம் அரசனிடம் காணப்பட்டது. கல்வித் தகுதியும் திறமையும் அடிப்படையாகக் கொண்ட போட்டித் தேர்வுகளின் வாயிலாக அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மத சகிப்புத்தன்மை கொண்டிருந்த டாங் ஆட்சி அதிகாரிகள் வியாபாரத்திற்கும் ஊக்கம் அளித்திருந்தனர். டாங் அரச வம்சத்திற்குப் பின்னர் ஸோங், மிங், மஞ்சு போன்ற அரச வம்சங்கள் சீனாவை ஆட்சிபுரிந்தது.

இடைக்கால ஜப்பானிலும் நாட்டின் மிக உயர்ந்த பதவியை அரசர்கள் நிர்வகித்திருந்தனர். ஆனால் ஷோகன்கள் என அழைக்கப்பட்ட நிலப்பிரபுக்கள் அதிகாரங்களை கையடக்கியிருந்தனர். நிலங்களையும் ஷோகன்கள் கட்டுப்படுத்தியிருந்தனர். ஷோகன்களின் காலத்தில் டோக்கியோ ஆட்சி மையமாக வளர்ச்சியடைந்தது.

இடைக்கால சீனாவிலும் ஜப்பானிலும் காணப்பட்ட அதிகார மையங்களை ஒப்புமைப்படுத்தவும்.



# இடைக்கால அமெரிக்கா

வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் பழங்காலம் முதலே அவர்களது நாகரீகம் காணப்பட்டது. அவை இடைக்காலத்திலும் தொடர்ந்தது. அப்பகுதிகளின் ஆட்சி முறைகளே அங்கு காணப்பட்டது.

| வடஅமெரிக்க நாகரீகங்கள் | தென் அமெரிக்க நாகரீகங்கள் |
|---|---|
| • மிசிசிபி நாகரீகம்<br>• கரீபியன் நாகரீகம்<br>• மொகல்லோன் நாகரீகம்<br>• படயன் நாகரீகம் | • மாயன்<br>• இன்கா<br>• அஸ்டெக்<br>• டோல்டெக் |

பதினாறாம் நுற்றாண்டுடன் ஐரோப்பியர்கள் அமெரிக்கர்களின் நாகரீகங்களை அழித்தனர். அமெரிக்கர்களைக் கொன்று குவித்து தோட்டங்களும் சுரங்கங்களும் உருவாக்கினர். அவ்விடங்களில் வேலை செய்வதற்காக ஆப்ரிக்காவிலிருந்து அடிமைகளைப் பிடித்துக்கொண்டு வந்தனர்.

**மாயன்களின் நாட்காட்டி**

மாயன்களின் நாட்காட்டியில் 365 தினங்கள் காணப்பட்டது. 20 தினங்களைக் கொண்ட 18 மாதங்களைக் கொண்டதே ஒரு வருடம். மீதமுள்ள 5 தினங்கள் கொண்டாட்டங்களுக்கும் திருவிழாக்களுக்குமான விடுமுறை தினங்களாக இருந்தது.

**சினம்ப**

சதுப்பு நிலங்களில் பச்சை இலைகளைக் கூட்டிச் சேர்த்து அஸ்டெக்குகள் சிறிய அமைப்புகளை உருவாக்கினர். வளம் வாய்ந்த இப்பகுதியில் மரங்களை நட்டு விளைச்சலைப் பெற்றனர். இது ஒழுகும் பூந்தோட்டம் (சினம்ப) என அறியப் பட்டது.

# நிலமானிய முறையின் வீழ்ச்சி

இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட சமூக – அரசியல் – பொருளாதார நிலமை எந்தப் பெயரில் அறியப்பட்டிருந்தது? நிலமானிய முறையின் அமைப்பும் சிறப்பம்சங்களும் பற்றி முன் வகுப்புகளில் கலந்தரையாடினோம் அல்லவா? பதினைந்தாம் நூற்றாண்டு காலயளவில் ஐரோப்பாவில் நிலமானிய முறை வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. நிலமானிய முறை வீழ்ச்சியடையக் காரணமான சூழல்கள் யாவை?

இடைக்காலத்தின் கடைசி நாட்களில் தோன்றிய காலநிலை மாற்றங்கள் மூலம் வேளாண் உற்பத்திக் குறைந்தது. இதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் பல

இடங்களிலும் கொடிய பஞ்சம் படர்ந்தது. தொடர்ச்சியாக வந்த கறுப்பு மரணம் என அறியப்பட்ட பிளேக் நோய் ஐரோப்பாவின் மொத்த மக்கள் தொகையின் நேர் பாதி மக்களின் உயிரைப் பறித்தது.

மத அடிப்படையில் தோன்றிய சிலுவைப் போர்கள் நிலமானிய பிரபுக்களை அழித்தது. நிலமானியப் பிரபுக்களை அடக்குவதற்காக வெடிமருந்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசர்கள் பயன்படுத்தினர். ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய விவசாயிகளின் புரட்சிகளும் போர்களும் நிலமானியப் பிரபுக்கள் வலுவிழப்பதற்கும் மக்களாட்சி முறை வலுவடைவைதற்கும் காரணமாகியது. இது தேசநாடுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது..

### சிலுவைப்போர்கள்

பதினொன்று முதல் பதிமூன்று வரையிலான நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் நிலமானியப் பிரபுக்களுக்கு ஆட்டோமன் துருக்கியர் களுக்குமிடையே நடந்த போர்கள் சிலுவைப் போர்கள் என அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர் களும் இஸ்லாமியர்களும் யூதர்களும் ஒரே மாதிரி புண்ணிய நகரமாகக் கருதும் ஜெருச லேமைக் கைப்பற்றுவதற்காக இந்தப் போர்கள் நடந்தது. கிழக்கத்திய நாகரீகம் ஐரோப்பாவில் பரவுவதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக சிலுவைப் போர்களைக் கணக் கிடலாம்..

**நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்ள் யாவை?**

இடைக்கால உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்ட அதிகார அமைப்புகளைப் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தவும்..

இடைக்கால உலகத்தின் வேறுபாடான அதிகார மையங்களைப்பற்றி இந்த அலகில் பார்த்தோம். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற இடங்களின் ஆட்சித்துறையில் மற்ற எல்லா காலங்களையும் போல் குறிப்பிடத்தக்கச் சீர்திருத்தங்கள் இக்காலத்தில் ஏற்பட்டது. நவீன காலத்தை நோக்கிய பயணத்திற்காக இச் சீர்த்திருத்தங்களும் அதிகார மையங்களும் வலுவூட்டியது.

இடைக்காலத்தில் காணப்பட்ட அதிகார அமைப்புகள் உலகிற்கு வழங்கிய நன்கொடைகளை உட்படுத்தி ஒரு சுவர் பதிப்பு தயாராக்குக.

## இடைக்கால உலகம் : அதிகார மையங்கள்

- கிழக்கத்திய ரோமப் பேரரசு
  - ஜஸ்ட்டினியன்
- புனித ரோமப் பேரரசு
  - ஷாலமீன்
- அரேபியப் பேரரசு
  - ஹாருண்-அல்-ரஷீது
- ஆட்டோமன் பேரரசு
  - சுலைமான்
- மங்கோலியப் பேரரசு
  - செங்கிஸ்கான்
- மாலி பேரரசு
  - கங்கன்மூசா
- இடைக்கால அமெரிக்கா
  - வடஅமெரிக்க நாகரீகங்கள்
  - தென் அமெரிக்க நாகரீகங்கள்
- நிலமானிய முறையின் வீழ்ச்சி

### முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- C.E ஐந்தாம் நூற்றாண்டு முதல் C.E பதினைந்தாம் நூற்றாண்டு வரையுள்ள உலகின் முக்கியமான அதிகார அமைப்புகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- கிழக்கத்திய ரோமப் பேரரசின் சிறப்பம்சங்களைக் கண்டுபிடிக்கின்றனர்.
- இடைக்கால உலகத்திற்கு அரேபியர்கள் அளித்த அரசியல் நன்கொடைகளைப் புரிந்துகொள்கின்றனர்.
- ஆட்டோமன் பேரரசு தோன்றுவதற்கான சூழலைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- மங்கோலியர்களின் சிறப்பம்சங்களை விளக்குகின்றனர்.
- இடைக்கால ஐரோப்பாவில் அரசியல் துறையில் ஷாலமீனின் வேறுபாட்டைப் புரிந்துகொள்கின்றனர்.
- இடைக்கால ஆப்ரிக்காவின் அதிகார மையங்களை விவரிக்கின்றனர்
- இடைக்காலத்தில் சீனாவிலும் ஜப்பானிலும் காணப்பட்ட அதிகார மையங்களை ஒப்புமை செய்கின்றனர்
- இடைக்கால அமெரிக்க நாகரீகங்களின் பெயர்களை அட்டவணைப் படுத்துகின்றனர்



# மதிப்பிடலாம்

- 'a' யின் பரஸ்பர உறவைப் புரிந்துகொண்டு 'b' யை நிரப்பவும்

1. a. பைசான்டியன் பேரரசு - ஜஸ்ட்டினியன்
   b. ........................................................ - ஷாலமீன்
2. a. திம்புக்து - மாலிப் பேரரசு
   b. பாக்தாத் - ........................................
3. a. டாங் அரசவம்சம் - சீனா
   b. ஷோகன்கள் - ........................................
4. a. ஹிஜ்ரா - C.E 622
   b. துருக்கியின் கான்ஸ்டாண்டி நோபின் படையெடுப்பு - ........................................

- கட்டத்தில் 'A' கொடுக்கப்பட்டவைகளுக்குப் பொருந்துபவற்றை 'B'

| A | B |
|---|---|
| • செங்கிஸ்கான் | ஆயிரத்து ஓர் இரவுகள் |
| • கங்கன் மூஸா | ஹிஜ்ரா |
| • ஹாரூண்-அல்-ரஷீது | மக்காவுக்கு புனிதப்பயணம் |
| • இறைதூதர் முகமது | கொரியர் முறை |

கட்டத்திலிருந்து கண்டுபிடித்து எழுதவும்

- ஜஸ்ட்டினியன் சட்டத்தொகுப்பின் சிறப்பம்சங்கள் யாவை?
- கிழக்கத்திய ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?
- அரேபியாவின் மிகவும் புகழ்பெற்ற ஆட்சியாளரே ஹாரூண் – அல் – ரஷீது. இக்கூற்றின் உண்மையை ஆய்வு செய்யவும்.
- மங்கோலிய இராணுவத்தின் முக்கியமான சிறப்பம்சங்கள் யாவை?
- செங்கிஸ்கான் அறிமுகப்படுத்திய கருத்துப் பரிமாற்ற முறையின் பெயர் என்ன? அதன் சிறப்பம்சங்கள் யாவை?

- கான்ஸ்டாண்டி நோபிள், பாக்தாத், திம்புக்து போன்ற இடைக்கால நகரங்களின் தனித்தன்மைகளைப் பட்டியல்படுத்தவும்..
- நிலமானிய முறையின் அழிவுக்குக் காரணமான சூழல்களைப் பகுப்பாய்வு செய்க.
- கான்ஸ்டாண்டிநோபிள், பாக்தாத், மக்கா, மதீனா, தமாஸ்கஸ் காரக்கோரம், மாலி,திம்புக்து, டோக்கியோ போன்ற இடைக்கால நகரங்களின் அமைவிடத்தை உலக நிலப்படத்தில் கண்டுபிடிக்கவும். தற்போது இந்தப் பகுதிகள் எந்தெந்த நாடுகளில் அமைந்துள்ளது? பட்டியல்படுத்தவும்.

## தொடர் செயல்பாடுகள்

- இடைக்கால உலகம் இருண்ட யுகமாக இருந்ததா? வகுப்பில் விவாதம் நடத்தவும்.
- பயணக் குறிப்பு நூல்களைச் சேகரித்து ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பகுதிகளைப் பற்றி ஒரு குறிப்பு தயாரிக்கவும்



அலகு

02



# கிழக்கும் மேற்கும் : பரிமாற்றங்களின் காலகட்டம்

பாலைவனங்களில் பிரயாணங்களுக்கு இடையே இரவு நேரங்களில் ஏதேனும் காரணத்தால் கூட்டத்தை விட்டுப் பிரிந்துவிட்டது எனக் கருதவும், கூட்டத்திற்கு திரும்ப வர முயற்சிக்கும் போது இருட்டின் மறைவிலிருந்து தனது கூட்டத்தைச் சேர்ந்தவர் பேசுவது போல் அவருக்குத் தோன்றும். சில வேளைகளில் தனது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டது போலத் தோன்றும். இந்த ஒலிகளைப் பின் பற்றி சென்றால் வழி தவறுவதும் மரணம் அடைவதும் சாதாரணமான நிகழ்ச்சியாகும். சில வேளைகளில் இரவு நேரங்களில் குதிரையின் குளம்படிச் சத்தங்களைக் கேட்கலாம். அந்தச் சத்தத்தைப் பின் தொடர்ந்தால் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியது தான். சில நேரங்களில் பெரும்பறைச் சத்தமும் ஆயுதங்கள் ஒன்றோடொன்று உரசுகின்ற சத்தங்களும் கேட்கலாம். இது போன்ற விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வாணிப சங்கங்கள் இயன்றவரை கூட்டமாகத் தங்குவார்கள். இரவு படுக்கச் செல்லும்போது அடுத்த நாள் பயணம் போகவேண்டிய திசையைக் குறிப்பிடும் திசைக்குறிப்புகளை வைத்து விலங்குகளின் கழுத்தில் சிறிய மணிகளையும் கட்டுவார்கள்.

**மார்க்கோ போலோ**

பிரபல ஐரோப்பிய யாத்திரிகரான மார்க்கோ போலோவின் பிரயாணக் குறிப்பிலிருந்து எடுத்த ஒரு பகுதியே இது. இடைக்கால வாணிப சங்கங்களைப் பற்றி அவர் விவரிக்கும் பகுதியே இது. முக்கியமாக கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையேயான வியாபாரத்தில் ஈடுபட்ட இச்சங்கங்கள் ஆபத்துகள் நிறைந்த வாணிபப் பாதைகளின் வழியாக பெருஞ்சவால்களை எதிர்கொண்டு தான் பயணம் செய்தார்கள்.

இடைக்காலத்தின் இரண்டு முக்கிய வாணிபப் பாதைகள் நிலப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதை உற்றுநோக்கி உங்களுக்கு எவையெல்லாம் கண்டுபிடிக்க இயலும்.




*பட்டுத் துணிப்பாதையையும் வாசனைத் திரவியப் பாதையையும் காட்டும் நிலப்படம்*



## பட்டுத் துணிப்பாதை (Silk Route)

சீனா முதல் ஐரோப்பா வரைப் பரவியிருந்த கரை வழியான வாணிபப் பாதையே பட்டுத்துணிப்பாதை என அறியப்பட்டிருந்தது. கிழக்கையும் மேற்கையும் இணைத்திருந்த இந்த வாணிபப் பாதைக்குச் சுமார் 6000 கி.மீ. நீளம் காணப்பட்டது. சீனா, இந்தியத் துணைக்கண்டம், பாரசீகம், ஐரோப்பா, ஆப்ரிக்காவின் வடக்குப் பகுதிகள் போன்ற இடங்களின் வாணிப - கலாச்சார - அறிவியல் வளர்ச்சிக்கு இந்தப் பாதைகளும் இப்பாதைகளுக்கிடையேயான ஓய்வு மையங்களான சத்திரங்களும் முக்கிய பங்கு வகித்தன.

- கிழக்கில் சீனா முதல் மேற்கில் ஐரோப்பா வரையிலும் இப் பாதைகள் பரவியிருந்தது.
- ஒரு பாதை கரை வழியாகும்.
- ஒரு பாதை கடல் வழியாகும்.
- ஏராளமான வியாபார மையங்கள் வழியாக இப்பாதைகள் கடந்து செல்கின்றது.
- 
- 

இடைக்காலத்தில் ஆரம்பத்தில் வலுவிழந்து காணப்பட்ட கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையேயான வாணிபம் சிலுவைப் போர்கள் துவங்கியதும் வலுவடைந்தது. இத்தாலிய வியாபாரிகள் கிழக்கத்திய ரோமப் பேரரசுடனும் அரேபியர்களுடனும் தொலை தூர வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். பாக்தாத், தமாஸ்கஸ், ஜெருசலேம் போன்ற நகரங்களுக்கு இத்தாலிய வியாபாரிகள் ஆட்களையும் பொருட்களையும் ஏற்றி அனுப்பியிருந்தனர்.

### வாசனைத் திரவியப் பாதை (Spice Route)

கிழக்கையும் மேற்கையும் இணைத்திருந்த கடல்வழிகளின் ஒரு தொடர்தான் வாசனைத் திரவியப் பாதை என அறியப்பட்டிருந்தது. ஜப்பானின் கடற்கரைப் பகுதி, சீனா, இந்தோனேஷியா, இந்தியா, ஸ்ரீலங்கா, மத்திய ஆசியா போன்ற பகுதிகளின் வாயிலாகக் கடந்து செல்கின்ற இப்பாதையின் முக்கியமான வாணிபப் பொருள் வாசனைத் திரவியங்கள் ஆகும்.



இடைக்கால கட்டத்தின் ஒரு வாணிப சங்கம் - ஓவியரின் கற்பனையில்

உற்பத்திப் பெருக்கம், உற்பத்திப் பொருட்களின் வேற்றுமைகள், சாலைகள் மற்றும் பாலங்களின் உருவாக்கம் கள்வர்களையும் வழிப்பறிக் கொள்ளையர்களையும் கட்டுப்படுத்துவதற்கான திறமையான நடவடிக்கைகள் போன்றவற்றின் விளைவாக கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான வாணிப உறவு விரிவடைந்தது.

## இடைக்கால உலகின் நகரங்கள்

பதினொன்றாம் நூற்றாண்டுடன் பழங்கால ரோம நகரங்கள் மறுபடியும் உணர்வு பெற்றது. அத்துடன் புதிய நகரங்களும் தோன்றியது. அவைகளே

- நிலமானியப் பிரபுக்களின் அரண்மனையைச் சுற்றிலும் வளர்ச்சியடைந்த நகரங்கள்.
- கிறிஸ்தவ தேவாலயங்களைச் சுற்றி வளர்ச்சியடைந்த நகரங்கள்.
- வியாபார மையங்கள் விரிவடைந்து தோன்றிய நகரங்கள்.

இடைக்காலகட்டத்தில் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களுமாகப் பொது வியாபார மையங்களை வந்தடைந்தனர். வணிகர்களும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களும் இத்தகைய மையங்களில் தங்கி தொலைதூரப் பகுதிகளோடு வாணிபம் செய்தனர். இப் பொதுவான வியாபார மையங்கள் படிப்படியாக நகரங்களாக வளர்ச்சியடைந்தது.

நிலமானிய முறையைப் பற்றி முன் வகுப்புகளில் நீங்கள் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? நிலமானிய முறையில் நாணயங்களுக்கு அதிக முக்கியத்துவம் காணப்படவில்லை. ஆனால் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் வியாபார மையங்கள் வளர்ச்சியடைந்ததுடன் பரிமாற்றத்திற்கு நாணயம் இன்றியமையா ததாக மாறியது. பதிமூன்றாம் நூற்றாண்டுடன் இத்தாலிய நகரங்களான ஃப்ளோரன்சும் வெனிசும் சொந்தமாக நாணயங்களைத் தயாரித்தனர். இத்தாலிய உபதீவின் துறைமுகங்கள், வணிகர்களுக்குக் கிடைத்திருந்த சலுகைகள் ஆட்சியாளர்கள் அளித்த ஊக்கம் போன்றவை பிற ஐரோப்பிய நாடுகளை விட

இத்தாலிய நகரங்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது. அவ்வாறு C.E 1050-க்கும் C.E 1300-க்கும்இடைப்பட்ட காலத்தில் ஜெனோவா, பிசா, வெனிஸ், ஃபுளோரன்ஸ் போன்ற இத்தாலிய நகரங்கள் முக்கிய வாணிப மையங்களாக மாறியது.

நிலப்படத்தை ஆய்வு செய்து ஐரோப்பாவின் முக்கியமான வாணிப மையங்களைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

இடைக்காலகட்டத்தில் இத்தாலியில் வாணிபம் வளர்ச்சியடைவதற்கான சூழலை மதிப்பிடவும்.


இடைக்கால கட்டத்தின் ஒரு ஐரோப்பிய நகரம் – ஓவியரின் கற்பனையில்

பெரும்பாலான இடைக்கால நகரங்களும் நதிக்கரைகளில் தான் தோன்றியது. நதிகளின் மூலமாக பொருட்களைக் கொண்டு செல்வது எளிதாக இருந்ததால் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. வியாபார மையங்களில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொடுத்ததும், இடைக்கால கட்டத்தின் மக்கள் தொகைப் பெருக்கமும் புதிய நகரங்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த பிற காரணிகளாகும்.

சமூக அறிவியல் கூடத்தில் படத்தொகுப்பை உற்றுநோக்கி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நகரங்கள் எந்தெந்த நதிக்கரையில் அமைந்துள்ளது என்பதைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்

| நகரம் | நதி |
|---|---|
| • லண்டன் | • |
| • பாரிஸ் | • |
| • ரோம் | • |
| • வியன்னா | • |

இன்று நாம் காணும் நவீன நகரங்களைப் போல இடைக்கால நகரங்கள் அமைந்திருக்கவில்லை. அவை பொதுவாக சிறிய நகரங்களாக இருந்தன. நகர வீதிகள் குறுகியதும் தூய்மையற்றதுமாகக் காணப்பட்டது.

கட்டிடங்கள் தடியால் செய்யப்பட்டதும் வைக்கோல் கூரையைக் கொண்டதுமாக இருந்தது. மக்கள் நெருக்கமாக வாழ்ந்திருந்த இவ்விடங்களில் தீ பிடிக்கும் வாய்ப்பு அதிகமாகக் காணப்பட்டது. நகரத்தில் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் வணிகர்கள், கைவினைத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களாவர். நகரத்தில் வாழ்ந்திருந்த தொழிலாளர்களுக்குச் செல்வம் இல்லாத காரணத்தால் அவர்கள் பிறரை நம்பி வாழ்ந்தனர். உணவிற்காக நகரங்கள் கிராமங்களைச் சார்ந்திருந்தது.

### நகரங்களைச் சுற்றிக் காணப் பட்ட மதில் கோட்டை

கிராமங்களின் எல்லை முடிந்து நகரங்கள் தொடங்குவதைக் காட்டும் அடையாளமே மதில் சுவருகள். பட்டணத்திற்குள் நுழைவதற்கு மதில்களில் வாசல்களும் காவல் மையங்களும் கோபுரங்களும் காணப்பட்டது. நகரத்தின் நுழை வாயில்களில் வரிவசூலிக்கவும் வசதி இருந்தது.



இடைக்கால நகரங்களைச் சுற்றிக் காணப்பட்ட கோட்டை

### கர்ஃபியூ

இடைக்கால இங்கிலாந்தில் எல்லா நாட்களிலும் இரவு எட்டு மணிக்கு வீடுகளின் தீயை அணைக்கவோ மூடி வைக்கவோ வேண்டி மணி ஒலித்திருந்தது. நகரத்தில் அடிக்கடி ஏற்பட்ட தீ விபத்தைத் தடுக்கத்தான் இது போல் செய்யப்பட்டது. இங்கிலாந்தில் நடைமுறைப்படுத்திய இந்தச் சட்டமே கர்ஃபியூ ஆகும். அக்னியை மூடவும் (Cover the fire) என்பதே இந்த வார்த்தையின் பொருளாகும். பிரச்சினைகள் பாதித்த பகுதிகளை அமைதியான நிலமைக்குத் திருப்பிக் கொண்டுவருவதற்காக அரசாங்கம் கைக்கொள்ளும் அவசர நடவடிக்கையே தற்போது கர்ஃபியூ என அறியப்படுகிறது

இடைக்கால நகரங்களின் சிறப்பம்சங்களைப் பகுப்பாய்வு செய்யவும்.

## கிழக்கு நகரங்கள்

இடைக்கால கட்டத்தில் மேற்கு ஐரோப்பிய நகரங்கள் அல்லாமல் பெரிய நகரங்களும் வியாபார மையங்களும் நிலைபெற்றிருந்த பிற பகுதிகள் எவை எனப் பார்ப்போம்.

அப்பாசியப் பேரரசின் தலைநகரமாயிருந்த பாக்தாத் இடைக்காலத்தில் வியாபாரத்தினுடையவும் வாணிபத்தினுடையவும் முக்கியமான மையமாக

இருந்தது. பாக்தாதின் சந்தைகள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட அபூர்வமான பொருட்களால் நிறைந்திருந்தது எனப் பல யாத்திரிகர்களும் விவரிக்கின்றனர்.

கிழக்கத்திய ரோமப் பேரரசின் தலைநகரமாக இருந்த கான்ஸ்டாண்டிநோபிள் (இஸ்தாம்புள்) பிரபலமான ஒரு வணிப மையமாக இருந்தது. பட்டுத்துணிப் பாதை வழியாகவும் வாசனைத் திரவியப் பாதை வழியாகவும் வந்து சேர்ந்த உற்பத்திப் பொருட்கள் ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது இந்த நகரத்தின் வழியாகத் தான். டைக்ரீஸ் நதிக்கரையில் அமைந்துள்ள பஸற அக்காலத்தைய ஒரு முக்கியமான துறைமுக நகரமாக இருந்தது. ஏதன், மக்கா, மஸ்கத்து, தமாஸ்கஸ் போன்றவையும் இடைக்கால கட்டத்தின் முக்கியமான நகரங்களாகும். கோழிக்கோடு, வாசனைத் திரவியப் பாதையின் ஒரு முக்கிய வாணிப மையமாகவும் துறைமுகமாகவும் ஆக இருந்தது. அக்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வாசனைத் திரவியங்களை ஏற்றிச் செல்வதற்காக ஏராளமான கப்பல்கள் கோழிக்கோட்டில் நங்கூரமிட்டிருந்தது. குஜராத்தின் சூரத்தும் ஒரு வாணிப மையமாக இருந்தது.



பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வாணிபப் பாதைகளின் நிலப்படத்தை உற்றுநோக்கி மத்திய ஆசியாவின் முக்கியமான நகரங்களைப் பட்டியல் படுத்தவும்.

- பாக்தாத்
-
-
-
-
-

கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் நிலைபெற்றிருந்த முக்கியமான வாணிப மையங்களும் நகரங்களும் பற்றி அறிந்துகொண்டோமல்லவா? இந்த நகரங்களில் காணப்பட்ட மக்களின் சமூக – பொருளாதார நிலை எவ்வாறு காணப்பட்டிருந்தது எனப் பார்ப்போம்.

## கில்டுகள் (Guilds)

இடைக்காலகட்டத்தின் சமூகப் பொருளாதார அமைப்பின் சிறப்பம்சமாக கில்டுகள் காணப்பட்டது. பல்வேறு தொழில் துறைகளின் நிபுணர்களின் சங்கங்களே கில்டுகள்.

- வியாபார கில்டுகள் (Merchant Guilds)
- கைவினைக் கலைஞர்களின் கில்டுகள் (Craft Guilds)

என இரண்டு வகையான கில்டுகள் காணப்பட்டது.


இடைக்கால செருப்புத் தயாரிக்கும் மையம்

இடைக்கால ஐரோப்பிய நகரங்களில் ஏற்பட்ட வியாபாரத்தின் வளர்ச்சி, தனித் தொழில்துறைகளின் தோற்றம் நகரங்களின் அதிகமான வரிக்கும் சுரண்டலுக்கும் எதிராகச் செயல்பட வேண்டியதன் தேவை. ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணம் போன்றவைகள் கில்டுகளின் தோற்றத்திற்குக் காரணமாயின.

பரஸ்பர உதவியும் ஒத்துழைப்பும் வளர்த்தல், சந்தைத் தொகையை நிலைநிறுத்துதல், பொருளாதாரத்தில் நிலையான தன்மையை அடைதல் போன்றவை கில்டுகளின் இலக்குகளாகும். வாணிப கில்டுகள் தான் முதலில் தோன்றியது. வாணிப வளர்ச்சியை இலக்காகக் கொண்ட அவை நகரங்களைப் பரஸ்பரம் இணைத்துக் கொண்டு நகரங்களுக்கிடையே லீகுகளைக் (Intercity Leagues) தோற்றுவித்தது. ஐரோப்பாவின் பல்வேறு நகரங்களின் வியாபாரச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தியிருந்த ஹான்சியாட்டிக் லீக் (Hansiatic League) இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.



ஓர் இடைக்கால நூற்பு ஆலை



இடைக்கால நெசவாளி

இடைக்கால கைவினைக் கலைஞர்களுடையவும் பிற நிபுணத்துவம் வாய்ந்த தொழிலாளர்களுடையவும் சங்கங்களே கைவினைக் கலைஞர்களின் கில்டுகள் (Craft Guilds). மரவேலை செய்பவர்கள், இரும்பு வேலை செய்பவர்கள் போன்ற ஒவ்வொரு தொழிற்பிரிவிற்கும் தனித்தனி கில்டுகள் காணப்பட்டது. தொழில் மயமாக்குதல், அறிவியல் – தொழில் நுட்பத்துறையின் வளர்ச்சி போன்றவை கில்டு முறையின் அழிவிற்குக் காரணமாகியது. .




இடைக்கால ஐரோப்பாவின் கில்டுகள் வாணிபத் துறையில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்க.

# இடைக்காலக்கல்வி



இடைக்காலக் கல்வி மையம் – ஓவியரின் கற்பனையில்

படங்களைக் கவனிக்கவும், இடைக்கால உலகத்தின் ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் பற்றிய குறிப்புகளை இப்படங்கள் வழங்குகிறது. இடைக்கால கட்டததில் ஐரோப்பா கல்வித்துறையில் வளர்ச்சியடைந்தது. அடிப்படைக் கல்வி, பல்கலைக்கழகங்கள், கிரேக்க – ரோம அறிவியல், இஸ்லாமிய அறிவியல் போன்றவற்றின் பரவல் இடைக்காலகட்டத்தின் சிறப்பம்சமாக இருந்தது. அடிப்படைக் கல்விக்காக ஏராளமான கல்விக் கூடங்கள் இக்காலயளவில் வளர்ச்சியடைந்தது.

இலக்கணம், லத்தீன் மொழி, வானவியல், இலக்கியம், தத்துவ சிந்தனை, கணிதம், இயற்கைச் சட்டங்கள் போன்றவைகள் இடைக்கால ஐரோப்பாவில் பள்ளிக் கூடங்களின் முக்கியமான கற்றல் பாடங்களாகும். இடைக்கால ஐரோப்பாவில் பெண்களின் கல்விக்கு வாய்ப்பு கிடைத்திருந்தது அருள்சகோதரிகளுக்கும் அபூர்வமாகச் சில பிரபுக்களுடையவும் ஆட்சியாளர் களுடையவும் வாரிசுகளுக்கு மட்டுமாக இருந்தது.



### கலோன்ஜியன் மறுமலர்ச்சி

இடைக்கால கட்டத்தில் 8, 9 நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்த கலாச்சாரமும் இயற்கையானதுமான உணர்வைப் பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கரோலின்ஜியன் மறு மலர்ச்சி (Carolingian Renaissance) எனச் சிறப்பித்துக் கூறுகின்றனர். ஷாலமீன் பேரரசருடையவும் அவரது வாரிசான லூயியின் காலகட்டத்திலும் தான் இந்த மறுமலர்ச்சி நடைபெற்றது. கல்வியறிவு அடைந்த ஒரு பிரிவு மக்கள் சமூகத்திற்குத் தேவை எனப் புரிந்துகொண்ட ஷாலமீன் பேரரசர் தனது பேரரசின் துறவு மடங்களும் ஆலயங்களும் இலவச ஆரம்பக் கல்வி வழங்கும் எனக் கட்டளையிட்டார்



இடைக்கால ஐரோப்பாவில் பள்ளிக்கூடங்களின் செயல்பாட்டு முறையைப் பற்றிக் கலந்துரையாடவும்.

இடைக்கால கட்டத்தில் கல்வி ஆரம்ப நிலையில் மட்டுமாக ஒதுங்கவில்லை. பல்கலைக்கழகக் கல்வியும் அக்காலத்தில் பரவலானது. இலக்கியம், மருத்துவம், பல்வேறு மொழிகள், ஜியோமிதி போன்றவைகள் பல்கலைக்கழகங்களில் கற்றல் விஷயங்களாகும். பதினொன்று, பனிரண்டாம் நூற்றாண்டு களில் ஐரோப்பாவில் ஏராளமான பல்கலைக்கழகங்கள் தோன்றியது. அவற்றுள் முக்கியமானவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

- பொளோணா – இத்தாலி
- கான்ஸ்டாண்டி நோபிள் – துருக்கி
- பாரிஸ் – பிரான்ஸ்
- ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் – இங்கிலாந்து



பொளோனா பல்கலைக்கழகம்

இடைக்கால கட்டத்தின் முக்கியமான பல்கலைக்கழகங்களில் ஒன்றே அரேபியர்கள் ஸ்பெயினில் நிறுவிய கொர்தோவாப் பல்கலைக்கழகம். ஆயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பரந்த நூலகம் இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இங்கே கிரேக்கம், சிரியக், பாரசீகம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் கற்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டது. பல்கலைக்கழக நூலகத்தில் இந்த மொழிகளில் உள்ள நூற்களின் அரேபிய மொழிபெயர்ப்பும் காணப்பட்டது.



கொர்தோவா பல்கலைக்கழகம்

கல்வித் துறையின் முன்னேற்றம் ஐரோப்பாவில் மட்டுமாக முடிந்துவிடவில்லை. அப்பாசியா கலீபாக்களின் காலத்தில் தான் மத்திய ஆசியாவில் கல்வி பரவலாகியது. பத்தாம் நூற்றாண்டு காலயளவில் தோன்றிய ஆரம்பக் கல்விக் கூடங்களில் (மக்தப்) ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான மாணவர்களுக்குக் கல்வி வழங்கப்பட்டது.

அரேபிய உலகில் பெண்களுக்குக் கல்வி வசதி காணப்பட்டது. பெண்களுக்குக் கல்வியின் வாயிலாக இஜாஸ் என்ற பட்டம் பெற்று ஆசிரியை ஆகுவதற்கான வாய்ப்பு காணப்பட்டது.

மத்திய ஆசியாவின் பாக்தாத், தமாஸ்கஸ் போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களும் எகிப்தில் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகமும் இடைக்கால கட்டத்தின் முக்கியமான கல்வி மையங்களாகும்..



*அல்–அஸ்ஹர் பல்கலைக்கழகம்*

இடைக்கால கட்டத்தில் கிழக்கு ஆசியப் பகுதிகளும் கல்வியின் முன்னேற்றத்திற்குச் சாட்சியம் வகுத்தது. பழங்காலம் முதலே சீனாவின் பல்வேறு பகுதிகளில் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டது. ஒரு தனிநபருக்குத் தனது

**பாடநூல் தயாரிப்பு**

கோர்தோவாயிலும் பாக்தாதிலும் கெய்ரோவிலும் உள்ள நூலகங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கையெழுத்துப் பிரதிகள் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். துணியிலிருந்து தயாரிக்கப்பட்ட காகிதம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மரத்தால் தயாரிக்கப்பட்ட அச்சுக்களையும் அவர்கள் பயன்படுத்தியிருந்தனர். உலகின் முதல் காகித மில் பாக்தாதில் நிறுவப்பட்டது. இரண்டாவது மில் கோர்தோலாவில் நிறுவப்பட்டது.

வளர்ச்சியுடன் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நன்கொடை களை வழங்க இயல்வதே கல்வி என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமானது. சீனாவின் பள்ளிக்கூடங்களில் ஆறு வயது முதல் கற்றல் ஆரம்பமானது. இப்பள்ளிக்கூடங்களில் பெரும்பாலானவை ஓராசிரியர் பள்ளிக்கூடங்களாகும். புத்தமத விகாரங்களோடு சேர்ந்து காணப்பட்டக் கல்வி மையங்களில் புத்தமதக் கொள்கைகள் கட்டாயப் பாடமாக இருந்தது.

மாணவர்கள் ஆசிரியர்களுடன் தங்கியிருந்து கல்வி கற்றிருந்த குருகுலக் கல்விமுறை மத்திய கால இந்தியாவிலும் காணப்பட்டது. இலக்கணம், மொழி, இலக்கியம், தத்துவ சிந்தனை, வானயியல் போன்ற பாடங்கள் இங்கே பயிற்றுவிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் இடைக்கால கட்டத்தில் கோயில்களோடு சேர்ந்து பல்வேறு பள்ளிக்கூடங்கள் காணப்பட்டது..

இடைக்கால சமூகத்தின் முன்னேற்றத்தில் கல்வியின் பங்கினைப் பற்றிக் கலந்துரையாடவும்.

# கலையும் இலக்கியமும்



ரோமனஸ்க் முறை



கோத்திக் முறை



கரோலின்ஜியன் முறை

இடைக்கால உலகம் கட்டிடக்கலையில் அடைந்த முன்னேற்றங்களைக் குறிப்பிடும் படங்கள் தான் கொடுக்கப்பட்டுள்ளது. ரோமனஸ்க் கோத்திக் முறைகளைப் பற்றி முன் வகுப்புகளில் கலந்துரையாடினீர்கள் அல்லவா. அத்துடன் பழங்கால ரோமின் கட்டிடக்கலையைப் பைசாண்டியன் கட்டிடக்கலையோடு இணைத்து ஒரு புதிய முறையை ஷாலமீன் பேரரசர்

உருவாக்கினார். இது கரோலின்ஜியன் முறை என அறியப்படுகிறது. தாழிக்குடங்களும் வாசல்களும் பெரிய தூண்களும் மொசைக் தரைகளும் இதன் சிறப்பம்சங்களாகும்.



பிளாட்டோணிக் அகாடமி – ஃபுளோரன்ஸ்

சிலுவைப் போர்களின் காலத்தின் ஐரோப்பிய மக்கள் இஸ்லாமிய கலாச்சாரத்தோடு அதிக அறிமுகமானார்கள். கலையும் இலக்கியமும் இக்காலகட்டத்தில் பரிமாற்றம் செய்யப்பட்டது. கிழக்கத்திய கலையும் கட்டிடக் கலையும் மேற்கத்திய முறையில் பரவலான தாக்கம் செலுத்தியது. சிலுவைப் போரில் பங்கு பெற்று திரும்பி வந்த பின்னர் பிரெஞ்சுப் பேரரசர் ஒம்பதாம் லூயி கட்டிய பாரிஸின் முதல் மருத்துவமனையான குவின் செவிங்கிட்டும் (Quinze-Vingts) ஃபுளோரன்ஸின் பிளாட்டோணிக் அகாடமியும் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.



குவின் செவிங்கிட் மருத்துவமனை – பாரிஸ்

மேற்கத்திய சங்கீதத்தின் ஆரம்பம் இடைக்காலத்திலாகும். தேவாலயங்களின் சங்கீதத்துடன் மதச் சார்பற்ற சங்கீதமும் அக்கால கட்டத்தில் வளர்ச்சியடைந்தது. C.E 500 முதல் 1400 வரையிலான காலகட்டத்தின் ஐரோப்பிய சங்கீதத்தில் அரேபியப் பாடல்களின் தாக்கத்தைக் காணலாம். உமவிய்யா, அப்பாசியா கலீபாக்களின் காலத்தில் அரேபிய சங்கீதம் அதிகமாகப் பரவியது. உமவிய்யா காலகட்டத்தின் மிகப் புகழ் வாய்ந்த இசை மேதை இபின் மிஸ்ஜ (Ibn Misjah). ஆவார். அவர் சிரியா மற்றும் பாரசீகம் வழியாகப் பயணம் செய்து பைசாண்டியன் சங்கீதத்திலும் பாரசீக சங்கீதத்திலும் திறன் பெற்று அரேபிய சங்கீதத்திற்குத் தொடக்கம் குறிக்கவும் செய்தார். அபு-அல்-ஃபராஜ்-அல்-இஸ்பஹானி (Abu-Al-Faraj-Al-Isfahani) இயற்றிய கிதாப்-அல்-அகாஹானி (Book of Songs) அரேபிய உலகத்தின் சங்கீதத்தைப் பற்றி அறிவு வழங்கும் நூலாகும். இக்காலகட்டத்தில் பிரபலமான இசை மேதைகளில் சிலர் தான் பாரசீக இசை மேதையாக இருந்த இபின் முஹ்ரிஸ் (Ibn Muhriz), இபின் சுராயி (Ibn Surayi) போன்றவர்கள்.



இடைக்கால கட்டத்தில் நடைமுறையிலிருந்த லியூட் என்ற இசைக்கருவி

இடைக்கால உலகத்தின் இலக்கியப் படைப்புகளில் முக்கியமாகக் கூறப்பட்டது மதத்தோடு தொடர்புடையவை ஆகும். ஆனால் மதச்சார்பற்ற விஷயங்களையும் அக்கால படைப்புகளில் காணமுடியும். அக்கால சில இலக்கிய மேதைகளும் அவர்களது படைப்புகளும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.


ரோமில் நிறுவப்பட்ட ஃபிர்தௌசியின் சிலை

| இலக்கிய மேதைகள் | படைப்புகள் |
|---|---|
| உமர்கய்யாம் | ரூபாயிய்யாத்து |
| அல்ஃபிர்தௌசி | ஷாநாமா |
| இப்னு கல்தூன் | கித்தாபுள் இபாத் |
| தாமஸ் அக்வினாஸ் | ஸம்மா தியோலஜி |
| புனித அகஸ்ட்டின் | சிட்டி ஆஃப் காட் |
| பீட்டர் அபிலார்ட் | டயலாக் |


சான்ட டிரினிட்டா மடோனா

இடைக்கால கட்டத்தில் ஓவியக்கலையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. ஓவியங்களில் மதக்கருத்துகள் தான் அதிகமாக வரையப்பட்டிருந்தது. சென்னி டி பெப்போ (Cenni di pepo) தீட்டிய சான்ட டிரினிட்டா மடோணா (SanteTrinita Madona) என்ற ஓவியம் இடைக்கால கட்டத்தில் ஓவியக்கலை அடைந்த வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான நல்லுறவின் எடுத்துக்காட்டுகளே கலையும் இலக்கியமும் - இக்கூற்றின் உண்மையைப் பற்றிக் கலந்துரையாடவும்.



# அறிவியல்

அறிவியல் துறைக்கு குறிப்பிடத்தக்க நன்கொடைகளை வழங்கிய ஏராளமான மேதைகள் இடைக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். அவர்களில் சிலரைப் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மேதைகள் | நன்கொடைகள் |
|---|---|
| இப்னு ஸீனா (அவிசன்னா) | கானூன்-ஃபிக்-துவிப், கிதாப்-அல்-ஷிப |
| அபு-அல்-காசிம் | அறுவை சிகிச்சையின் தந்தை |
| அல்பிறூனி | புவி உட்புறத்தினுடையவும் மானிடவம்ச அறிவியலினுடையவும் நிபுணர் |
| முகமது அல்-றாஸி | கித்தாம்புள் ஹவை |
| ரோஜர் பேக்கண் | இயந்திர வாகனங்கள், வானூர்திகள் போன்றவைகளின் கண்டுபிடிப்பிற்கு அடித்தளமானது. |
| பாஸ்கர II | ஜோதிடவியலுக்கு கவனிக்கதக்க நன்கொடை வழங்கியுள்ளார். |



இப்னு ஸினா

இடைக்கால அறிவியலுக்கு அரேபியர்கள் வழங்கிய குறிப்பிடத்தக்க நன்கொடைகள் எவையெனப் பார்ப்போம்.

- அரேபிய எண்களும் பூஜ்யமும் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குப் பரவியது
- வேதியியலை ஓர் அறிவியல் என்ற நிலையில் விரிவுபடுத்தினர்.
- இயற்கணிதத் (Algebra) தினுடையவும் ஒளி அறிவியலினுடையவும் (Optics) மேதைகள் அரேபியர்களாவர்.

சிலுவைப் போர்கள் அறிவியல் – தொழில் நுட்பத் துறையின் பரிமாற்றத்திற்குக் காரணமானது. அரேபியர்களோடுள்ள உறவின் வாயிலாக ஐரோப்பிய மக்கள் அறிந்துகொண்ட தொழில் நுட்ப அறிவுகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- தொலை நோக்கி தயாரிப்பதற்கான உபகரணங்கள்
- நகரங்களின் தெருவிளக்குகள், மாசுகளை அழிக்கும் திட்டங்கள்
- மெக்கானிக்கல் கடிகாரங்கள்
- கியரின் தத்துவம்
- அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள்
- இயற்கணிதம், ஆல்க்கமி, திரிகோணமிதி

### கைஃபங்கின் கடிகார கோபுரம்



எட்டாம் நூற்றாண்டில் சீனர்கள் உலகில் முதன் முதலாகக் கடிகாரங்களைத் தயாரித்தனர். நீர் ஆற்றலால் செயல்படும் 12 மீட்டர் உயரமுள்ள வானவியல் கடிகாரத்தைப்பற்றி சீனாவின் குறிப்புகளில் காணப்படுகிறது. இக்கடிகாரத்தின் பகுதியான சிறிய மனித உருவங்கள் இடைவேளைகளில் மணி ஒலிக்கச் செய்யவும் முரசடிக்கவும் செய்கிறது..

இடைக்காலத்தில் சீனாவும் அறிவியல், தொழில்நுட்பத் துறையில் கவனிக்கத்தக்க முன்னேற்றம் பெற்றிருந்தது. வெடிமருந்து, புவிஅதிர்வுகளை அளக்கும் பூகம்பமானி திசைகாட்டும் கருவி, ஜோதிட அறிவியலாளர்களும், கப்பற்படை தலைவர்களும் பயன்படுத்தும் ஆஸ்ட்ரலோப் போன்றவை இடைக்கால சீனாவின் நன்கொடைகளாகும். ஐரோப்பாவில் பரவிய இடைக்கால கிழக்கத்திய அறிவுகளும் அறிவியல் – தொழில் நுட்பங்களும் நவீன உலகத்தின் தோற்றத்திற்கும் தொழில் – அறிவியல் துறைகளின் முன்னேற்றத்திற்கும் அடித்தளம் அமைத்தது.

இடைக்கால உலகத்தின் கல்வி – அறிவியல் முன்னேற்றம் தான் நவீன யுகத்தின் தொடக்கத்திற்குக் காரணமாகியது. இந்தத் தலைப்பில் ஒரு விவாதம் நடத்தவும்.

இடைக்காலத்தில், கலை, கல்வி, அறிவியல் என்னும் துறைகளில் அரேபியர்களின் நன்கொடையை மதிப்பிடவும்.

## கிழக்கும் மேற்கும் : பரிமாற்றங்களின் காலகட்டம்

**வாணிபம்**
↓
வணிகப் பாதைகள்
↓
பட்டுத்துணிப் பாதை
↓
வாசனைத் திரவியங்களின் பாதை
↓
வியாபார மையங்கள்
↓
நகரங்களின் தோற்றம்
↓
கில்டுகள்

**நாகரீகம்**
↓
கல்வி
↓
பல்கலைக் கழகங்கள்
↓
கலாச்சாரா பரிமாற்றம்
↓
கலை
↓
இலக்கியம்
↓
சங்கீதம்
↓
அறிவியல்

### முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- கிழக்கையும் மேற்கையும் இணைத்திருந்த வணிகப் பாதைகளும் வாணிப உறவுகளும் பற்றி புரிந்துகொள்கின்றனர்..
- இடைக்கால கட்டத்தின் வாணிப மையங்களையும் நகரங்களையும் பட்டியல் செய்கின்றனர்.
- இடைக்கால உலகத்தில் வாணிபத்திற்குக் காணப்பட்ட முக்கியத்துவம் பற்றி விவரிக்கின்றனர்.
- ஐரோப்பாவில் காணப்பட்ட கில்டு முறையின் சிறப்பம்சங்களை விவரிக்கின்றனர்.
- ஐரோப்பா, மத்திய ஆசியா, சீனா போன்ற இடங்களில் அறிவியல் – கல்வி துறைகள் அடைந்த முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.

- இடைக்கால கட்டத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் அரேபியர்கள் அளித்த நன்கொடைகளை விளக்குகின்றனர்.
- இடைக்கால கட்டத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குகின்றனர்.



## மதிப்பிடலாம்

- 'வணிகப் பாதைகள் கிழக்கையும் மேற்கையும் இணைத்தது – நிறுவுக.
- தொலைதூர வாணிபம் வளர்வதற்குக் காரணமான சூழல்களை ஆய்வு செய்யவும்.
- நகரங்கள் வியாபார மையங்களாக மாறியதன் காரணங்கள் யாவை?
- இடைக்கால உலகத்தில் ஏற்பட்ட அறிவியல் – தொழில் நுட்பத் துறையின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு தயாரிக்கவும்.
- இடைக்கால உலகத்தில் சொந்தமாக நாணயங்களை வெளியிட்ட நகரங்கள் யாவை?
- கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நகரங்களை அட்டவணைப்படுத்தவும்.
  பாக்தாத், ஃபுளோரன்ஸ், ஜனோவா, தமாஸ்கஸ், வெனீஸ், மக்கா

| ஐரோப்பிய நகரங்கள் | கிழக்கத்திய நகரங்கள் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |
| • | • |

- கில்டுகளின் முக்கியமான பொறுப்புகளைப் பட்டியல் படுத்தவும்.
- இடைக்கால ஐரோப்பிய பள்ளிக்கூடங்களின் முக்கியமான கற்றல் விஷயங்கள் யாவை?
- பட்டியலை நிரப்பவும்

| விஞ்ஞானிகள் | நன்கொடைகள் |
|---|---|
| • இப்னு, ஸீன | • ...................................................... |
| • முகமது அல்-ராஸி | • ...................................................... |
| • ............................................... | • அறுவை சிகிச்சையின் தந்தை |

## தொடர் செயல்பாடுகள்

- இடைக்காலகட்டத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் நிலைபெற்றிருந்த பல்கலைக்கழகங்களைப் பற்றி தொடர் தேடல் நடத்தி குறிப்பு தயாரிக்கவும்.
- இடைக்கால உலகத்திற்கு மகத்தான நன்கொடைகளை வழங்கிய தத்துவ சிந்தனையாளர்களையும் மேதைகளையும் பற்றி ஒரு கட்டுரை தயாரிக்கவும்.

அலகு

# 03




# இந்திய அரசியலமைப்பு உரிமைகளும் கடமைகளும்

## இந்திய அரசியலமைப்பு

### முன்னுரை

இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை [இறையான்மை நிலை சமத்துவமும் மதச்சார் பற்றதுமான மக்களாட்சிக் குடியரசாக] அதன் குடிமக்கள் அனைவருக்கும்:

**சமூக பொருளாதார அரசியல் நீதியும்; சிந்தனைகளுக்கும், கருத்து வெளியீட்டிற்கும் நம்பிக்கைக்கும், சமய நெறிக்கும் வழிபாட்டிற்கும் உள்ள சுதந்திரம்;**

**பதவிகளிலும் வாய்ப்புகளிலும் சம உரிமையும் தன்னிறைவும் உடையவராகச் செய்தலும்;**

அனைவருக்குமிடையே

தனிமனித கௌரவத்தையும் [நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும்] உறுதிசெய்து சகோதரத்துவத்தைக் கடைபிடிக்கவும்;

முடிவெடுத்திருந்தால்;

நமது அரசியலமைப்புச் சட்டசபையில் 1949–ஆம் ஆண்டு நவம்பர் 26– ஆம் நாள் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளவும், சட்டமாக ஒப்புக்கொள்ளவும் நமக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## THE CONSTITUTION OF INDIA

### PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a [SOVEREIGN SOCIALIST SECU-LAR DEMOCRATIC REPUBLIC] and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the [unity and integrity of the Nation];

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையைத் தான் நீங்கள் வாசித்தீர்கள். முன்னுரையில் இந்தியா ஒரு சமத்துவ- மதசார்பற்ற- மக்களாட்சிக் குடியரசு நாடாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் சில சமூக- அரசியல் பொருளாதார இலக்குகளை உறுதி செய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை யாவை?

- சமூக, பொருளாதார அரசியல் நீதி
- 
- 
- 
- 

முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இலக்குகளை அடைவதற்கான அமைப்புகள் நமது அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- அடிப்படை உரிமைகள்
- அரசுநெறிமுறைக் கோட்பாடுகள்
- அடிப்படைக் கடமைகள்

## அடிப்படை உரிமைகள்

உரிமைகளைக் குறித்து முன் வகுப்புகளில் விவாதித்திருக்கிறோம் அல்லவா? மக்களாட்சி சமூகத்தின் பிரிக்கமுடியாத காரணியாகிய உரிமைகள் இந்தியா உறுதி வழங்குகிறது. இவற்றில் மிக இன்றியமையானவற்றை அடிப்படை உரிமைகள் என்ற பெயரில் நமது அரசியலமைப்பின் III-ஆம் பகுதியில் (Part III) உட்படுத்தப்பட்டுள்ளது.

சில உரிமைகள் அடிப்படை உரிமைகள் என அறியப்படுவதற்கான காரணம் என்ன?

ஒரு நபருக்கு எக்காரணத்தைக் கொண்டும் மறுக்கப்பட முடியாத உரிமைகள் தான் அடிப்படை உரிமைகள். அவை ஒரு நபரின் முழுமையான வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாததாகும். எனவே தான் அடிப்படை உரிமைகளுக்கும் அவற்றின் பாதுகாப்புக்கும் ஒரு மக்களாட்சி சமூகத்தில் பெரும்பங்கு உள்ளது.

வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் இந்திய மக்களுக்கு உரிமைகளும் சுதந்திரமும் கிடைந்துள்ளதா?

ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்தியர்களுக்கு பல உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளதாக நீங்கள் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? இந்திய விடுதலைப் போராட்ட இயக்கம் குடிமக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை எப்போதும் எழுப்பிக் கொண்டேயிருந்தனர். இதில் மிக முக்கியமான ஒன்று 1928-இல் நேரு குழு வெளியிட்ட அறிக்கையாகும். அந்த அறிக்கை இந்தியாவிலுள்ள

மக்களுக்கு உறுதி அளிக்க வேண்டிய உரிமைகளின் பட்டியலைச் சமர்ப்பித்தது. விடுதலைப் போராட்டம் இலக்காக வைத்ததும் நேரு குழு அறிக்கை குறிப்பிட்டதுமான உரிமைகளின் அடிப்படையில் அரசியலமைப்பு குழுக்கள் அடிப்படை உரிமைகளை உருவாக்கினர். அமெரிக்க அரசியலமைப்பின் உரிமை அட்டவணையும் நமது அடிப்படை உரிமைகள் உருவாக்குவதில் தாக்கம் செலுத்தியது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமைகளைப் படத்தில் பார்க்கவும்.

முக்கியமாக ஆறு அடிப்படை உரிமைகளை இந்திய அரசியலமைப்பு வழங்கியுள்ளது. அவை ஒவ்வொன்றையும் விளக்கமாக ஆராய்வோம்.






அடிப்படை உரிமைகள் கௌரவமான வாழ்க்கைக்கு இன்றியமையாதது. விவாதிக்கவும்.

## சமத்துவ உரிமை

### மத்தியமபுரம் கிராமத்தில் ‘ஜாதி வேலி’ அகற்ற வேண்டுமென மனித உரிமைக் குழுக்கள்

டெல்லி: வடஇந்திய கிராமமான மத்தியமபுரத்தில் தலித் பிரிவினர் உயர் ஜாதியைச் சார்ந்தவர்கள் வாழும் இடங்களில் நுழைவதைத் தடுப்பதற்காக உருவாக்கிய வேலியை அகற்ற வேண்டுமென பல்வேறு மனித உரிமை இயக்கங்கள் அரசிடம் கோரிக்கை வைத்தன. மத்தியமபுரத்தில் வேற்றுமைகள் ஜாதியில் மட்டுமல்ல. பெண்களுக்குத் தெருக்களிலும் உணவகங்களிலும் செல்லத் தடை விதிப்பதும், வேறு ஊரில் உள்ளவர்களை அந்த ஊரில் நுழைவதற்குத் தடை விதிப்பதும் முன்பு செய்தியாக வந்துள்ளன .....

எந்தெந்த வகையிலான வேற்றுமைகளைக் குறித்து செய்தித் துணுக்கில் கூறப்பட்டுள்ளது.?

- ஜாதி அடிப்படையிலான வேற்றுமை
- ஆண்- பெண் சமத்துவமின்மை
- பிறந்த இடத்தின் அடிப்படையிலுள்ள வேற்றுமை

இதைப் போன்று ஏராளமான சமத்துவமின்மைகளும், பிரிவினைகளும் நிலைநிற்கின்ற சமூகமமே நம்முடையது . இவ்வாறான சமூக சமத்துவமின்மைகளை

### சட்டத்தின் முன் சமத்துவம்

நடைமுறையிலுள்ள சட்ட அமைப்பிற்கு முன் எல்லா குடிமக்களும் சமமானவர்கள் என்பதே சட்டத்தின் முன் சமத்துவம் என்பதன் பொருள். ஒரு நபருடைய அங்கீகரிக்கப்பட்ட பதவியோ. அதிகாரமோ எதுவாக இருந்தாலும் அவர் சட்ட அமைப்பிலிருந்து விலக முடியாது.

### பதவிப் பெயர்களை அகற்றுதல்

ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்களுடைய ஆதிக்கத்தைப் பாதுகாக்க உதவுகின்ற இந்தியப் பணியாட்களுக்கு 'சர்' போன்ற பதவிகள் வழங்கி வந்தனர். ஏகாதிபத்திய பாதுகாப்பிற்காக இத்தகைய பதவிகளைத் தவறாகப் பயன்படுத்துவதை இந்திய தேசிய இயக்கம் எதிர்த்தது. இத்தகைய பதவிப் பெயர்கள் சமத்துவமின்மைக்குக் காரணமாவதால் இந்தியச் சட்ட அமைப்பு பதவிப் பெயர்களை ரத்து செய்தது.

முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் சமத்துவத்தை உறுதி செய்தல்.

சமத்துவத்திற்கான உரிமையில் உட்கொள்ளப்பட்ட கருத்துகள் கீழே கூறப்பட்டுள்ளது.

- சட்டத்திற்கு முன் சமத்துவம் உறுதிசெய்தல்.
- ஜாதி, மதம், இனம், பால், பிறந்த இடம் ஆகிய வற்றின் அடிப்படையிலான வேற்றுமைகளை எதிர்த்தல்.
- அரசு ஆணைகளில் அவசர சமத்துவம் உறுதி செய்தல்.
- தீண்டாமையை அகற்றுதல்
- பதவிப் பெயர்களை அகற்றுதல்.

ஆனால் பெண்கள், குழந்தைகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு தனி ஒதுக்கீடு வழங்குவதில் சமத்துவ உரிமை எதிர்ப்பதில்லை. ஆனால் மாறாக தனி ஒதுக்கீடு வழங்குவதன் வழியாகச் சமத்துவமின்மையைத் தவிர்க்கவும் சமத்துவத்தை நிலைநிறுத்தவும் இயலும்.



சமத்துவத்தை அடைவதற்காக அரசுகள் கையாளப்பட்டுள்ள முக்கிய நடவடிக்கைகளைக் கண்டுபிடித்து அட்டவணையை விரிவாக்குங்கள்.

- 1955- இல் தீண்டாமை ஒழிப்புச் சட்டம்
- 
- 

## சுதந்திர உரிமை



காந்தியடிகள் மக்களுடன் உரையாடுவதையும் சொற்பொழிவைக் கேட்பதற்காகவும் மக்கள் சமாதானமாக கூடியிருக்கும் படம் கொடுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கின்ற சுதந்திரத்துடன் தொடர்புடையனவாகும். அவை யாவை?

- பேசுவதற்கும், கருத்துகளை வெளியிடுவதற்கும் உள்ள சுதந்திரம்.
- சமாதானமாகவும், ஆயுதங்களின்றி அமைதியாகவும் கூட்டம் நடத்துவதற்குள்ள சுதந்திரம்.

இது தவிர,

- சங்கங்கள் அமைப்பதற்குள்ள சுதந்திரம்.
- இந்தியப் பகுதிகளில் சுதந்திரமாகப் பயணம் செய்வதற்கான சுதந்திரம்.
- இந்தியப் பகுதிகளில் வசிப்பதற்கும், நிலையாகத் தங்குவதற்கும் உள்ள சுதந்திரம்.
- எத்தகைய தொழிலைச் செய்வதற்கும், வியாபார வாணிபச் செயல்பாடுகள் இவற்றை நடத்துவதற்கும் உள்ள சுதந்திரம்.
- உயிருக்கும் தனிநபர் சுதந்திரத்திற்கும் உள்ள பாதுகாப்பு.
- ஆறு முதல் பதிநான்கு வயது வரையுள்ள எல்லா குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி கிடைப்பதற்கான உரிமை.
- அநீதியான கைது, சிறையிலடைத்தல் ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பு.

ஆகியவை சுதந்திரத்திற்கான உரிமையில் உட்படுகிறது.

### உயிருக்கும் தனிநபர் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு

அரசியலமைப்பின் படி, சட்டபூர்வமான நடவடிக்கைகளில் அல்லாமல் ஒரு நபரின் உயிரோ சுதந்திரமோ துன்புறக்கூடாது. இந்த உரிமை அவசரக்காலத்திலும் மறுக்கக்கூடாது. ஆட்சியாளர்களின் சர்வாதிகாரத்தைத் தடை செய்வதற்கு இந்த உரிமை மக்களுக்கு உதவுகிறது.

சுதந்திர உரிமைக்கு ஒரு மக்களாட்சி நாட்டில் பெரும்பங்கு உள்ளது. மேல் குறிப்பிட்டுள்ள அடிப்படை சுதந்திரங்கள் இந்தியாவின் மக்களாட்சிப் பண்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உதவியுள்ளது. அதே நேரத்தில் இவை அனைத்தும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும். நாட்டின் ஐக்கியத்திற்கும், சமாதான சூழலுக்கும் அறைகூவல் விடுக்கும் வகையில் இந்த சுதந்திரத்தை அனுபவிக்க இயலாது.

"சுதந்திரத்திற்கான உரிமை மக்களாட்சிப் பண்பாட்டை உறுதிப்படுத்துகிறது" மதிப்பீடு செய்யவும்.

## சுரண்டலுக்கு எதிரான உரிமை



படங்களை உற்றுப்பாருங்கள்.என்னென்ன கருத்துகளை இதிலிருந்து புரிந்து கொண்டீர்கள்?

- தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற குழந்தைகளின் படமாகும்.
-
-

குழந்தைத் தொழில் உட்பட்ட பலவகையான சுரண்டல்கள் இந்தியாவில் நிலை நிற்கிறது. அடிமைத்தனத்துக்கு இணையான பொருளாதாரச் சுரண்டல்கள் நம்மைச் சுற்றிப் பார்க்க இயலும். இத்தகைய சுரண்டல்களைத் தடைசெய்வதற்கும். பெரு மிதமான வாழ்க்கை வாழ்வதற்கு தகுதியடைவதற்கும் உள்ள உரிமை தான் சுரண் டலுக்கு எதிரான உரிமை.

இந்த உரிமையின் படி :

- கட்டாயத் தொழில், மனித வியாபாரம் ஆகியவை தடைசெய்யப் பட்டுள்ளது.
- தொழிற்சாலைகளிலும், பிற ஆபத்தான துறைகளிலும் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.



சுரண்டலுக்கு எதிரான உரிமை எந்தெந்த முறைகளில் குடிமக்களைப் பாதுகாக்கிறது? விவாதிக்கவும்.

## மதவழிபாட்டுச் சுதந்திரம்



**"ஏராளமான மதங்கள் நிறைந்த இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டின் அரசிற்கு நவீன காலத்தின் மதச்சார்பின் மையின் அடிப்படையில் செயல்படுவதற்கு இயலாது. நம் முடைய அரசியலமைப்பு மதசார்பின்மை அடிப்படை யானதும் மதவழிபாட்டுக்கு சுதந்திரமும் வழங்குகிறது"**

**ஜவஹர்லால் நேரு**

நவீன இந்தியாவின் சிற்பியான ஜவஹர்லால் நேருவின் வார்த்தைகளைக் கவனித்தீர்களல்லவா.

மதச் சார்பின்மை என்பதன் பொருள் என்ன?

இந்தியாவிற்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட மதம் இல்லை. ஒரு மதத்தையும் இந்தியா ஊக்கப்படுத்துவதுமில்லை.

ஆனால் மதவழிபாட்டு சுதந்திரத்தை அரசியலமைப்பு உறுதி செய்கிறது.

- சுதந்திரமாக எந்த மதத்தையும் நம்புவதற்கும் கடைபிடிப்பதற்கும் பறை சாற்றுவதற்கும் உள்ள உரிமை.
- மதப்பிரிவினர்களுக்கு மத ஜீவ காருண்ய நிறுவனங்கள் அமைப்பதற்கும் நடத்திச் செல்வதற்கும் உள்ள உரிமை.

- ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மதத்தை ஊக்குவிப்பதற்காக வரிப்பணம் கொடுப்பதற்கு கட்டாயப்படுத்துவதற்கு எதிரான உரிமை.

ஆனால் அதே நேரத்தில் அரசு நடத்துவதோ அரசின் உதவி பெறுவதோ ஆன கல்வி நிறுவனங்களில் மதக்கல்வி நடத்தவோ மதவாழிபாடுகளைக் கட்டாயப்ப டுத்தவோ கூடாது.

மத வழிபாட்டிற்கான உரிமை எவ்வாறு மதச்சார்பின்மையை ஊக்குவிக்கிறது? விவாதிக்கவும்.



## கல்விப் பண்பாட்டு உரிமைகள்




கொடுக்கப்பட்டுள்ள செய்தித் துணுக்குகளைக் கவனிக்கவும். சிறுபான்மைப் பிரிவினர்களின் உரி மைகளுடன் தொடர்புடைய செய்திகளாகும்.

இந்தியா வேற்றுமையின் நாடல்லவா? வேற்றுமை களை அங்கீகரிக்கவும் மதிக்கவும் செய்ய வேண் டியது ஒரு நாட்டின் ஐக்கியத்திற்கும், முன்னேற் றத்திற்கும் இன்றியமையாதது. எனவே தான் சிறு பான்மை நலப்பாதுகாப்பிற்கு நமது அரசியல மைப்பு கூடுதல் முன்னுரிமை வழங்குகிறது. பிற சமூகப் பிரிவினர்களைப் பொறுத்த வரையில் சிறுபான்மையினர் குறைவான எண்ணிக்கை உடையவர்களும், சொந்தமாக மொழி, எழுத்து உரு, மதம் பண்பாடு ஆகியவை உடையவர்கும் ஆவர். இந்தப் பிரிவினர்களின் உரிமைகள் பாதுகாப்பதற்காக பண் பாட்டுக் கல்வி உரிமைகள் அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உரிமைகள் சிறுபான்மையினருக்கு கீழே கூறப்பட்டுள்ளவற்றை உறுதி செய்கிறது.

- அவர்களுடைய மொழி, எழத்து உரு, பண்பாடு ஆகியவற்றின் பாதுகாப்பு.
- மத- மொழி சிறுபான்மையினருக்குத் தங்கள் விருப்பப்படி கல்வி நிறுவ னங்கள் தொடங்குவதற்கான உரிமை.

கல்விப் பண்பாட்டு உரிமை நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுகிறது? விவாதிக்கவும்.



## அரசியல் அமைப்புச் சட்டப்படி தீர்வு காணும் உரிமை

சில அடிப்படை உரிமைகளைக் குறித்து நீங்கள் புரிந்து கொண்டீர்களல்லவா? ஏதேனும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட சூழல் உங்களுடைய கவனத்திற்கு

வந்துள்ளதா? அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அதற்கான தீர்வு முறைகளும் வேண்டுமல்லவா?

அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவை தீர்வு காண்பதற்கான முறைகளும் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புச் சட்டப்படி தீர்வு காணும் உரிமை என்றறியப்படுகிறது. ஒரு நபருக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவை மீண்டும் கிடைப்பதற்கு உச்ச நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தை நேரடியாக அணுகுவதற்கான உரிமையே அரசியலமைப்புச் சட்டப்படி தீர்வு காணும் உரிமை. இவ்வாறு அடிப்படை உரிமைகள் மீண்டும் கிடைப்பதற்காக நீதிமன்றங்கள் வெளியிடுகின்ற ஆணைகள் 'ரிட்டு' என அறியப்படுகிறது.

அரசியல் சட்டப்படி தீர்வு காணும் உரிமையைக் குறித்து அரசியலமைப்பின் சிற்பி டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் கூறியிருப்பதைக் கவனிக்கவும்.

*"இந்த அரசியலமைப்பில் மிக முக்கியமான துறை எது எனக் கேட்டால். என்னுடைய பதில் அரசியல் அமைப்புச் சட்டப்படி தீர்வு காணும் உரிமை என்பதாகும். இது இந்திய அரசியலமைப்பின் இதயமும் ஆத்மாவுமாகும்".*

**டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்**





## ரிட்டுகள்

அடிப்படை உரிமை பாதுகாப்பிற்காக ஐந்து வகையான தடுப்பாணைகள் விடுப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் உரிமை உள்ளது. கேபியஸ் கார்பஸ், மாண்டமஸ், கோவாறண்டோ, செர்சியோரை, புரொகிபிஷன் ஆகியவையாகும்.

இந்த வார்த்தைகளிலிருந்து அரசியலமைப்பு சட்டப்படி தீர்வு காண்பதற்கான உரிமையின் சிறப்பும் முக்கியத்துவமும் நமக்குப் புரிகிறது



**அரசியலமைப்புச் சட்டப்படி தீர்வுகாண்பதற்கான உரிமையின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பகுப்பாய்வு செய்க**



கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் A கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை எந்த அடிப்படை உரிமையுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை B கட்டத்தில் நிரப்பவும்.

| A | B |
|---|---|
| • கருத்து வெளியீட்டிற்கான உரிமை | • சதந்திரத்திற்கான உரிமை |
| • மதத்தைப் பரப்புவதற்கான உரிமை | |
| • சங்கங்களை உருவாக்கும் உரிமை | |
| • மொழியைப் பாதுகாக்கும் உரிமை | |
| • அநீதியான கைதிலிருந்து பாதுகாப்பு | |
| • ஆண் பெண் வேற்றுமை அகற்றுதல் | |
| • சமத்துவம் மறுக்கப்பட்டால் நீதிமன்றங்களை அணுகும் உரிமை | |
| • குழந்தைகளுக்கு ஆபத்தான தொழில் சூழல் களிலிருந்து பாதுகாப்பு | |

## அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்


பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டது

காதிப் பொருட்களுக்கு அரசு சலுகை விதித்தது

பான்மசாலாக்களுக்குத் தடை

கொடுக்கப்பட்டுள்ள செய்தித் துணுக்கைக் கவனியுங்கள். எந்தெந்த துறைகள் செய்தித் துணுக்குகளில் கூறப்பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- 
- 

மக்கள் நலனை முன்வைத்து மேல்குறிப்பிட்டதைப் போன்ற திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசியலமைப்பு சட்டம் மத்திய மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. இத்தகைய நெறிமுறைகள் அரசியலமைப்பின் IV-ஆம் பகுதியில் (Part IV) அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் என்ற பெயரில் உட்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வளமான நாட்டை உருவாக்குவதற்கு உதவும் வகையிலான சமூக- பொருளாதார- அரசியல் திட்டங்கள் நெறிமுறைக் கோட்பாடுகளில் உட்படுத்தப்பட்டுள்ளது. பெயரில் குறிப்பிட்டுள்ளபடி இவை அனைத்தும் நெறிமுறைகளாகும். இவற்றை நாம் கொள்கை உருவாக்கத்தின் போதும்,திட்டம் செயல்படுத்தும் போதும் கருத்திற் கொள்ள வேண்டியதும் நடைமுறைப்படுத்த வேண்டியதுமான நெறிமுறைகளாகும். அடிப்படை உரிமைகளில் உட்படுத்துவதற்கு இயலாத சில உரிமைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

### அரசு நெறிமுறைக் கோட்பாடுகளில் உட்படுபவை



- இலவச சட்ட உதவி
- ஆண்- பெண் இரு பாலருக்கும் சம வேலைக்கு சம கூலி
- தாழ்த்தப்பட்ட- மிகவும் தாழ்த்தப்பட்ட பிரிவுகளின் கல்வி- பொருளாதாரத் தேவையைப் பாதுகாத்தல்.
- சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் உறுதி செய்தல்.



நம்முடைய தேசத்தந்தையாகிய மாகாத்மா காந்தியின் பல கருத்துகளும் நெறி முறைக் கோட்பாடுகளில் உட்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கிராம பஞ்சாயத்தை ஒன்று கூட்டுதல்.
- குடிசைத் தொழிலை ஊக்குவித்தல்.
- போதைப் பொருட்களுக்குத் தடைவிதித்தல்.

உரிமைப் பாதுகாப்பிற்கான அடிப்படை உரிமைகளும் வள மான நாட்டை உருவாக்குவதற்கான நெறிமுறைக் கோட் பாடுகளும் தம்மில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அடிப் படை உரிமைகள் முழுமையாக கிடைக்கவேண்டுமெனில் நெறிமுறைக் கோட்பாடுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்ய வும், மேம்படுத்தவும் உதவுகின்ற வரையறைகள் என்ற நிலையில் நெறிமுறைக் கோட்பாடுகளின் முக்கியத்து வத்தை யாராலும் மறுக்க முடியாது.

**வளமான நாடு**

எல்லா மக்களுடையவும் நலனை இலக்காகக் கொண்டு கொள்கைகளை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் செய்கின்ற நாடுதான் வளமான நாடு. வளமான நாடுகள் மக்களின் பன்முக முன்னேற்றத்தை இலக்காக வைத்தே மக்களுக்குப் பாதுகாப்பும் சேவையும் வழங் குகிறது. பொது வளங்களின் விநியோகம், கல்வி உடல்நலப் பாதுகாப்பு ஆகியவற்றை ஒரு வளமான நாடு உறுதி செய்கிறது.

**நெறிமுறைக் கோட்பாடுகளை வரையறுக்க வும் அவற்றின் முக்கியத்துவத்தை விளக்கவும்**

அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நெறிமுறைக் கோட்பா டுகளைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

## அடிப்படை உரிமைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள சோதனைப் பட்டியலை முழுமையாக்குங்கள்.

தேசிய கீதம் பாடும் போது எழுந்து நிற்பேன்.

ஆம் | இல்லை

நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற பகுத்தறிவு உண்டு.

ஆம் | இல்லை

மக்களிடையே நட்பை வளரச்செய்வதற்கு முயற்சி செய்வேன்.

ஆம் | இல்லை

நாட்டின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பாதுகாப்பேன்.

ஆம் | இல்லை

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முயற்சி செய்வேன்.

ஆம் | இல்லை

மேலே கொடுக்கப்பட்டுள்ள சோதனைப் பட்டியலில் நாம் செய்ய வேண்டிய சில கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதுடன் அடிப்படைக் கடமைகளையும் செய்ய வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் IV A -யில் அடிப்படைக் கடமைகளைக் குறித்து கூறப்பட்டுள்ளது. நாட்டின் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு குடி மக்கள் நாட்டிற்கு சில கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த கடமைகளை அடிப்படைக் கடமைகள் என்றறியப்படுகிறது. நாடு நமக்கு உரிமைகளும் பாது காப்பும் வழங்கும் போது அரசியலமைப்புச் சட்டைத்தைப் பாதுகாக்க வேண்டிய தும், குடிமக்களிடையே நட்பை வளரச்செய்வதும் நாட்டின் நிலைநிற்பிற்கும் உதவ வேண்டியதும் நம்முடைய கடமையாகும். இவ்வாறு அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதன் வழியாக ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கவும் அதன் விளை வுகள் சமூகத்தில் அனைவருக்கும் உறுதிசெய்யவும் இயலும். சுருக்கமாகக் கூறி னால் அடிப்படைக் கடமைகள் என்பது ஒவ்வொருவரும் அவரவர்களோடு செய் கின்ற கடமை என்று கூறலாம்.

**அடிப்படைக் கடமைகள் என்பது ஒவ்வொருவரும் அவரவருடன் செய்ய வேண்டிய கடமையாகும். பகுப்பாய்வு செய்க.**





அடிப்படைக் கடமைகளை உட்படுத்தி அட்டவணை தயார் செய்க.

அடிப்படை உரிமைகள், நெறிமுறைக் கோட்பாடுகள் அடிப்படைக் கடமைகளும் குறித்து நாம் விவாதித்தோம் அல்லவா? நம்முடைய நாட்டினுடையவும் சமூகத்தி னுடையவும் நிலைநிற்பிற்கு இவை மூன்றும் முக்கிய தாக்கம் செலுத்துகின்றன. அடிப்படை உரிமைகள் வழியாகவும், நெறிமுறைக் கோட்பாடுகள் வழியாகவும் இயன்ற அளவு சுதந்திரமும், மக்கள் நலனும் உறுதி செய்வதற்கு அரசு முயற்சிக் கிறது. அத்துடன் நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் அடிப்படை கட மைகள் வழியாக வரையறுக்கப்படவும் செய்கின்றோம். அடிப்படை உரிமைகளை உறுதிசெய்யவும், நெறிமுறைக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் மக்கள் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றவும் செய்வதன் வழியாக மட்டுமே நாட் டில் ஐக்கியத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டு வரமுடியும்.




## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- முக்கிய அடிப்படை உரிமைகளை அட்டவணைப்படுத்துகின்றனர்.
- சமத்துவ உரிமையை விளக்குகின்றனர்.
- இந்திய அரசியலமைப்பு உறுதிசெய்கின்ற சுதந்திர உரிமையை அட்டவணைப்படுத்துகின்றனர்.
- சுரண்டலுக்கு எதிரான உரிமை உறுதி செய்கின்ற பாதுகாப்பைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- மதசுதந்திரத்திரன் காரணிகளை மதிப்பீடு செய்கின்றனர்.
- கலை பண்பாட்டு உரிமையை விளக்குகின்றனர்.
- அரசியலமைப்புச் சட்டப்படி தீர்வு காணும் உரிமையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.
- அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை வரையறுக்கின்றனர்.
- அடிப்படைக் கடமைகளின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.

## மதிப்பிடலாம்

- அடிப்படைக் கடமைகளை வரையறுக்கவும்.
- இந்தியாவின் அடிப்படை உரிமைகள் உருவாக்குவதில் தாக்கம் செலுத்திய அரசியலமைப்பு எந்த நாட்டினுடையது.?
  (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்)
- இந்திய அரசியலமைப்பு தனிமனிதனுக்கு உறுதி செய்கின்ற அடிப்படை உரிமைகள் யாவை?
- சில உரிமைகள் மட்டும் அடிப்படை உரிமைகள் என அறியப்படக் காரணம் என்ன?
- வேற்றுமைகளுக்கு முடிவு காணும் அடிப்படை உரிமை எது?
  (சமத்துவ உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர உரிமை)
- சமத்துவ உரிமையில் உட்பட்ட முக்கிய கருத்துகள் யாவை?
- இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கின்ற சுதந்திர உரிமைகள் யாவை? அவற்றின் முக்கியத்துவத்தை மதிப்பிடவும்.
- கல்விக்கான உரிமை எந்த அடிப்படை உரிமையின் பாகமாகும்?
  (கல்விப் பண்பாட்டு உரிமை, சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை)
- சுரண்டலுக்கு எதிரான உரிமை எந்தெந்த செயல்களில் பாதுகாப்பை வழங்குகிறது.?
- மத வழிபாட்டிற்கான சுதந்திரம் குறித்த விளக்கவும். அவை எவ்வாறு மதச் சார்பின்மையைப் பாதுகாக்கிறது என்பதைப் பகுப்பாய்வு செய்யவும்.
- தீண்டாமையைத் தடைசெய்கின்ற அடிப்படை உரிமை எது?
  (சுரண்டலுக்கு எதிரான உரிமை, சமத்துவ உரிமை, வழிபாட்டு உரிமை)
- சிறுபான்மையினரின் உரிமைகளைக் குறிப்பிடுகின்ற அடிப்படை உரிமை எது?
  (சமத்துவ உரிமை, கல்விப் பண்பாட்டு உரிமை, மத வழிபாட்டு உரிமை)
- கல்வி பண்பாட்டு உரிமைகள் எவ்வாறு சிறுபான்மையினரின் தேவைகளைப் பாதுகாக்கிறது என்பதை விளக்கவும்.
- அரசியலமைப்பு சட்டப்படி தீர்வுதேடும் உரிமை என்பதன் பொருள் என்ன?
- அரசியலமைப்பின் இதயமும் உயிரும் என டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் கூறியுள்ள அடிப்படை உரிமை எது என்பதை விளக்கி அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடவும்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை அட்டவணையில் ஒழுங்கு செய்யவும்
  சுதந்திர உரிமை, கிராம– பஞ்சாயத்து உருவாக்கல், நாட்டின் ஐக்கியமும், ஒற்றுமையும் பாதுகாத்தல். கல்வி, பண்பாட்டு உரிமைகள் போதைப் பொருட்களுக்குத் தடை, வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் சர்வ தேச சமாதானமும் பாதுகாப்பும் உறுதி செய்தல்.

| அடிப்படை உரிமைகள் | நெறிமுறைக் கோட்பாடுகள் | அடிப்படைக் கடமைகள் |
|---|---|---|
| | | |

- ரிட்டுகள் என்றால் என்ன? அவற்றின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்யவும்.
- நெறிமுறைக் கோட்பாடுகளை விளக்கவும். அவை எவ்வாறு அரசின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான எல்லையாகிறது என்பதைப் பகுப்பாய்வு செய்யவும்.
- அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன?



## தொடர் செயல்பாடுகள்

- அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதுடன் தொடர்புடைய பத்திரிக்கைச் செய்திகளைச் சேகரித்து தொகுப்பு தயாரிக்கவும்.
- மாணவர்களின் உரிமைகளும், கடமைகளும் உட்படுத்தி ஒரு சுவர்ப் பத்திரிக்கை உருவாக்கவும்.
- அரசு நடைமுறைப்படுத்திய நெறிமுறைக் கோட்பாடுகளை அட்டவணைப்படுத்தவும்.



அலகு

04

# இடைக்கால இந்தியா : அரச கட்டளையும் ஆட்சிமுறையும்

கடவுளுடைய பூமியிலுள்ள பிரதிநிதிதான் அரசர். கடவுளைப் போன்று இணையற்ற ஆற்றல் அரசருக்கும் உண்டு. இணையற்ற ஒழுக்கமும் பணிவும் சபையில் வேண்டும். பொழுது போக்கும் உரக்கச் சிரிப்பும் மன்னர்களுக்குக் கூட உகந்தது அல்ல. இளவரசர்களும், சாமந்தர்களும் சுல்தானுக்கு முன்பாகப் பணிந்து தான் நிற்க வேண்டும். அரச அவையில் உள்ளவர் அரச உடைகளைச் சரியாக அணிந்து வரிசைக்கேற்ப நிற்க வேண்டும். பிரதம அமைச்சர் தவிர ஒருவருக்கும் நேரடியாக சுல்தானிடம் பேசுவதற்கு உரிமை கிடையாது. அரசவேடமும், சாயலும் நிலைநிறுத்துவதன் பாகமாக ஆயுதம் ஏந்திய இராணுவ வீரர்கள் எல்லா இடங்களிலும் காவலுக்கு உடன் செல்வர்.

தாரிக் – இ – பிரோஸ் – ஷாகி, சியாவுதீன் பராணி

கி.பி. 1206 முதல் 1526 வரை டெல்லியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த சுல்தான் அரச வம்சங்களைக் குறித்து நீங்கள் கற்றிருக்கிறீர்கள் அல்லவா? மல்லூக், கல்ஜி, துக்ளக், சையது, லோதி போன்று ஐந்து அரச வம்சங்கள் அக்காலத்தில் ஆட்சி செய்தனர். மல்லுக் வம்சத்தில் புகழ்பெற்ற பால்பன் என்பவரின் மன்னராட்சியைக் குறித்த கண்ணோட்டத்தைச் சியாவுதீன் பராணி விவரிக்கிறார்.

### சுல்தான்

அதிகாரம் என்று பொருள் வரக்கூடிய சுல்த் (Sult) என்ற சொல்லிருந்து சுல்தான் என்ற பெயர் வந்தது. ஒரு நபருக்குப் பிறர் மீதுள்ள அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் குறிப்பிடு வதே இச்சொல்.

### துருக்கிப் பரம்பரை

மன்னர் கடவுளுக்கு இணையானவர் என்ற கண்ணோட்டம் துருக்கி பரம்பரையில் இருந்தது. சர்வவல்லவரும், சர்வாதிகாரியும், நீதிமானுமாகிய கடவுளின் இடம் மன்னருக்கும் இருந்தது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து கட்டுப்பாடற்ற சர்வாதிகாரம் என்ற கருத்து உருவானது. குடும்பத்தலைவர் குடும்ப உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதுபோல மன்னர் ஆட்சி செய்தார். அவருடைய தீர்மானங்களை உறுப்பினர்கள் கேள்வி கேட்பதில்லை. ஒவ்வொரு உறுப்பினர் களுடையவும் பதவியும், சொத்துரிமையும் அவர் தீர்மானிப்பார். இவ்வாறு குடும்பத் தலைவர் குடும்பத்தை நடத்துவது போன்றும், கடவுள் பிரபஞ்சத்தைப் பாதுகாப்பதுபோலவும் சர்வாதிகாரத்துடன் நாட்டை ஆளுவதற்கு மன்னரால் இயலுகிறது.

### மையஆட்சி

சுல்தான்கள் காலத்தில் மையஆட்சியில் முக்கிய தலைவர்களும் அவர்களுடைய பொறுப்புகளும்.

| | |
|---|---|
| வசீர் | - பொருளாதாரம் |
| மமாலிக் | - இராணுவம் |
| முக்யசதர் | - நீதித்துறை |
| திவான்-இ- இன்ஷா | - அரசு கடிதப் போக்கு வரத்துகள் |

இந்திய ஆட்சித்துறையில் மத்திய மன்னராட்சி முறையை சுல்தான்கள் நடைமுறைப் படுத்தினர், அவற்றின் முக்கிய சிறப்புகள் எவையென ஆராய்வோம்.

- துருக்கிப் பரம்பரையின் தாக்கம்
- ஆட்சி, இராணுவம், நீதித்துறை ஆகியவற்றின் தலைவர் மன்னராக இருந்தார்.
- ஆட்சிக்காரியங்களில் சுல்தானுக்கு உதவுவதற்கு ஏராளமான அமைச்சர்களும் பணியாட்களும் இருந்தனர்.
- ஒழுங்கான பின் தொடர்ச்சிச் சட்டம் இருக்க வில்லை.
- பாக்தாதில் கலீபாவின் தலைமைத்துவத்தை அங்கீகரித்தனர்.
- கலவர எச்சரிப்பைத் தடை செய்வதற்கு மன்னர் எல்லையைப் பெருக்குவதற்கும் திடமான ஒரு இராணுவத்தை நிலைநிறுத்தினர்.
- ஆட்சியின் வசதிக்காப் பெரிய நாட்டைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தார்.
- கிராமங்களில் உள்ளூர் சட்டங்கள் நிலைநின்றது.

## வட்டார ஆட்சி

சுல்தான் ஆட்சியில் நிலைநின்ற மைய ஆட்சியின் சிறப்புகளைப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? வட்டார அளவில் ஆட்சிமுறை எவ்வாறு இருந்தது என ஆராய்வோம். ஆட்சியின் வசதிக்காப் பேரரசுகளைப் பிறவிஸ்யகள், ஷிகுகள், பர்கானாக்கள், கிராமங்கள் என வகைப்படுத்தினர். ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தனித்தனி அதிகாரிகளை நியமித்தனர். அவர்களுடைய அதிகாரம் பரம்பரை முறையாக அமையவில்லை. அமைதியை நிலைநாட்டுதல், நீதிநியாயம் நிர்வகித்தல் சொத்துவரி வசூலித்தல், இராணுவத்தைக் கூட்டுதல் ஆகியவை அவர்களின் பொறுப்புகளாகும். அவர்கள் சுல்தானின் நேரடியான கட்டுப்பாட்டில் இருந்தனர், ஆனால் கிராம ஆட்சியில் சுல்தான்கள் நேரடியாக ஈடுபடவில்லை.

## இக்தா முறை

சுல்தான்களின் ஆட்சியின் தொடக்கத்தில் நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து இராணுவத் தலைவர்களாகிய பிரபுக்களிடம் ஒப்படைத்தனர். இந்தப் பகுதிகள் இக்தா எனவும் இதைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் இக்தார் முக்தி, வாலி என்ற பெயர்களில் அறியப்பட்டனர். இங்குள்ள வரிவசூலித்தல், ஒழுங்குமுறைப் பாதுகாப்பு ஆவியவற்றின் பொறுப்பு இக்தார்களிடம் இருந்தன. மேலும் அவர்கள் தனக்கென ஒரு இராணுவத்தை வைத்திருக்க வேண்டும். வசூலித்த வரிப்பணத்தின் ஒரு பகுதியை அவர்களுடைய செலவுக்கும் மீதி ஆட்சி நிர்வாகத்திற்கும் பயன்படுத்தினர். ஆனால் அவர்களுக்கு சுதந்திரமான அதிகாரம் வழங்கப்படவில்லை. இக்தாகள் பின்பு பிறவிஸ்யகளாக உருமாறின.

### வட்டார ஆட்சி

சுல்தான் ஆட்சியில் வட்டார ஆட்சிப் பிரிவுகளும் அவற்றின் பொறுப்புகளை வகித்த அதிகாரிகளும்.

| | |
|---|---|
| பிறவிஸ்யா | - முக்தி (வாலி) |
| ஷிக் | - ஷிக்தார் |
| பர்கானா | - அமில் |
| கிராமம் | - முக்தம் |



சுல்தான் காலத்தில் நிறுவப்பட்ட தௌலதாபாத் கோட்டை

சுல்தான்களின் ஆட்சியின் சிறப்பம்சங்களைக் கீழே கொடுக்கப் பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் விவாதிக்கலாம்.

- மையஆட்சி
- வட்டார ஆட்சி
- பின்தொடர்ச்சி உரிமை
- இராணுவ ஆட்சி

## அங்காடிச் சீர்திருத்தம்

டெல்லியில் உள்ள சுல்தான்களின் ஆட்சி இராணுவ வலிமையை அடிப் படையானதாக இருந்தது. வலிமை மிக்க ஒரு இராணுவத்தை எப்போதும் தயாராக நிறுத்துவதில் சுல்தான்கள் கவனம் செலுத்தினர். கில்ஜி சுல்தானாக இருந்த அலாவுதீன்கில்ஜி குறைந்த செலவில் பெரிய ஒரு இராணுவத்தை நிலைநிறுத் துவது என்ற நோக்கத்துடன் நடைமுறைப்படுத்திய ஒரு சீர்திருத்தம் தான் அங்காடிச் சீர்திருத்தம். இராணுவச் செலவைக் குறைப்பதற்காக அன்றாடப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகும். இதனால் அன்றாடப் பொருட்களின் விலையை அரசு நிர்ணயித்தது. அந்த விலைக்குப் பொருட்களை விற்பதற்கு வியாபாரிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். பொருட்களைப் பதுக்கி வைத்தல், கருஞ்சந்தை போன்றவை நடத்துபவர்களுக்கும் கடும் தண்டனை அளிக்கப்பட்டது. அளவுகளும் எடைகளும் ஒருங்கிணைக்கப்பட்டன.

அரசு தானியக் கிடங்குகளை நிறுவி விவசாயிகளிடமிருந்து தானியங்களை வாங்கிப் பாதுகாக்கவும், பஞ்ச காலங்களில் மிதமான விலைக்கு விநியோகமும் செய்தனர். அங்காடிச் சட்டங்களைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகளை நியமித்தனர். அதன் விளைவாக இராணுவ வீரர்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை வாக்குவதற்கு முடிந்தது. எனவே அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. இத்தகைய நடவடிக்கைகள் வழியாகச் சுல்தான்கள் இராணுவ செலவை குறைக்கவும், அதன்வழியாகக் கிடைத்த வருமானத்தினால் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் செய்தனர்.

**சுல்தான் ஆட்சியில் இராணுவத்தை வலுவடையச் செய்வதற்கு அங்காடிச் சீர்திருத்தம் வகித்த பங்கை ஆராய்க.**

## மொகலாய ஆட்சி

கார்த்திகை மாதம் மழை நின்ற ஒரு நாளில் புகழ்பெற்ற பேரரசர் (பேரரசர் அக்பர் ஷாகி ஜலால்) ஆக்ராவில் இறுதி மூச்சை விட்டார். மரணச்செய்தி காட்டுத்தீ போல நாடெங்கும் பரவியது. மேய்ப்பனின்றி அனாதைகளாக்கப் பட்டதைப் போன்று மக்களுக்குத் தோன்றியது. பயம் நாடெங்கும் பார்க்க முடிந்தது முகம் விளறியது. செய்தியைக் கேட்டபோது நான் என்னுடைய வீட்டு முற்றத்தில் உட்கார்ந்திருந்தேன். எனக்குத் தலை சுற்றுவதுபோல் தோன்றி, சமநிலையை இழந்து விழுந்தேன். அனைவரும் வீட்டில் கதவுகளைப் பூட்டினர். வியாபாரிகள் கடைகளை அடைத்தனர். தங்கம் போன்ற விலைமதிப்புள்ள பொருட்களை மண்ணில் குழிதோண்டி புதைக்கத் தொடங்கினார். செல்வந்தர்கள் பழைய ஆடைகளை அணிந்து ஏழையாக மாறுவதற்கு முயன்றனர். கூட்டத்தில் செல்வந்தர்களையும் ஏழைகளையும் பிரித்தறிய இயலாமற்போனது. எல்லா முகங்களிலும் பயத்தைப் பார்க்க முடிந்தது. ஆனால் திருடர்களிடமிருந்தும் வழிப்பறிக்காரர்களிடமிருந்தும் நாடு விடுதலையானதால் அத்தகைய அச்சங்களுக்கு அடிப்படையில்லை.

அர்த் கதானக் (1605 C.E) பனார்சிதாஸ்.

### மொகலாய வம்சம்

இந்தியாவில் மொகலாயப் பேரரசர்கள் மங்கோலியன் ஆட்சியாளர்களான செங்கிஸ் கானுடையவும் திமூரினுடையவும் பின்தலை முறையினர்களாக இருந்தனர். பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் இந்த அரசவம் சத்திற்கு முகள் எனப் பெயர் வைத்தனர்.

சுல்தான்களின் காலத்திற்குப் பின்பு டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மொகலாயர்களில் முக்கியமானவரான அக்பரின் இறப்பைத் தொடர்ந்துள்ள மக்களின் பிரதிபலிப்பை தான் அந்தக் காட்சியை நேரடியாகப் பார்த்த பனான்சிதாஸ் விவரிக்கிறார். மொகலாயர் ஆட்சி மக்களுக்கு எந்த அளவு பாதுகாப்பை வழங்கியுள்ளது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

கி.பி. 1526 இல் பாபர் நிறுவிய மொகலாக அரசவம்சத்தைக் குறித்து முன் வகுப்புகளில் விவாதம் செய்திருக்கிறோம் அல்லவா? தென்னிந்தியாவில் சில பகுதிகள் தவிர இந்தியாவை முழுவதும் ஒரே அரசாக ஒருங்கிணைப் பதற்கு மொகலாய ஆட்சியால் இயன்றது. ஆட்சித்துறையில் அடிப்படையான மாற்றங்கள் அக்காலத்தில் ஏற்பட்டது.


அக்பரின் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆக்ரா கோட்டை


அபுல் பாசல் அக்பர்நாமா வைக் குறித்து அக்பரிடம் விளக்குகின்ற படம்

மொகலாயர் காலத்தில் ஆட்சி அமைப்பைக் குறித்து தெரிந்து கொள்ள உதவுகின்ற முக்கிய ஊடகங்களில் ஒன்றாகும் அபுல் பைசல் எழுதிய அக்பர் நாமா.

## மங்கோலிய பரம்பரை

கடவுளின் ஆசைகளை நடைமுறைப் படுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்ட நபரே மன்னர் என்ற நம்பிக்கையே மங்கோலிய பரம்பரையின் அடிப்படை. கடவுளின் கட்டளை அசரீரியாக கிடைத்தது எனவும் அந்த வழியாகத் தான் பயணம் செய்வதாகவும் மங்கோலியன் ஆட்சியாளரான செங்கிஸ்கான் கூறினார். கடவுளின் பிரதிபலிப்பே மன்னர் என்ற கண்ணோட்டம், மன்னரின் அதிகாரத்தை எதிர்க்கலாமல் நிலைநிறுத்துவதற்கு உதவியது.

மொகலாய ஆட்சியில் சிறப்புகள் எவையெப் பார்ப்போம்.

- மன்னரின் அதிகாரம் கடவுளுக்கு இணையானதாகும்.
- துருக்கி, மங்கோலிய முறைகளின் தாக்கம்.
- எல்லா அதிகாரமும் மன்னரில் மையமானது.
- இராணுவ சக்தியை அடிப்படையாக் கொண்டது.
- அமைச்சர்களும் அதிகாரிகளும் ஆட்சிக்கு உதவினர்.
- வட்டார ஆட்சி நிலைநின்றது.

**சுல்தான்களின் ஆட்சி, மொகலாயர் ஆட்சி ஆகியவற்றின் பொதுவான சிறப்பம்சங்களை விவாதித்து குறிப்பு எழுதவும்.**

## வட்டார ஆட்சி

வட்டார ஆட்சியிலும் மொகலாயப் பேரரசர்கள் தனிக்கவனம் செலுத்தியிருந்தனர். ஆட்சியின் வசதிக்காக நாட்டை சுபகள், சர்க்கார்கள், பர்கானாகள், கிராமங்கள் எனப் பல பிரிவுகளாகப்

### மைய ஆட்சி

மொகலாயர் காலத்தில் மைய ஆட்சியின் முக்கிய அதிகாரி களும் அவர்களுடைய பொறுப்பு களும்.

| | | |
|---|---|---|
| வக்கீல் | - | பிரதம அமைச்சர் |
| வசிர் | - | பொருளாதாரம் |
| சதர் | - | நீதித்துறை |
| மிர்பட்சி | - | இராணுவம் |

### வட்டார ஆட்சி

மொகலாயர் காலத்தில் வட்டார ஆட்சிப் பிரிவுகளும் அவற்றின் பொறுப்பு வகித்த அதிகாரிகளும்.

| | | |
|---|---|---|
| சுபா | - | சுபேதார் |
| சர்க்கார் | - | பௌஜ்தார் |
| பர்கானா | - | ஷிக்தார் |
| கிராமம் | - | சௌதுரி |
| பட்டணம் | - | கொத்துவாள் |

பிரித்தனர். ஒவ்வொரு காரணியினுடையஹவும் ஆட்சிக்காகக் குறிப்பிட்ட அதிகாரிகளின் ஒரு வரிசை இருந்தது. வரிவசூலித்தல், நீதி நிர்வாகம் இராணுவ மேற்பார்வை ஆகியவை அவர்களுடைய பொறுப்புகளாயிருந்தன.




*அக்பர் காலத்திலுள்ள சுபகள்*

அக்பரின் காலத்தில் மொகலாய ஆட்சி வலுவடைந்து இந்தியாவின் எல்லாப் பிரிவிலுள்ள மக்களுடையவும் ஆதரவுள்ள ஆட்சியாளராக வேண்டும் என்பதே அவருடைய இலக்கு. அதற்காக அக்பர் கையாண்ட நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- பாத்ஷா - இ - ஹிந்து (இந்தியப் பேரரசர் என்ற பதவியை ஏற்றுக் கொண்டார்.
- பல்வேறு மதப்பிரிவினருக்கிடையிலான நட்பை நிலைநிறுத்துவதற்காக எல்லா மதங்களுடையவும் கருத்துகளை உட்படுத்தி தீன்-இலாகி என்ற புதிய சுபிமுறைக்கு உருவம் கொடுத்தார்.
- இரஜபுத்திரர்களாகிய ராஜாதோடர்மாள், பீர்பால் மான்சிங் ஆகியோருக்கு உயர் பதிவுகளை வழங்கினார்.
- இரஜபுத்திர பெண்களை அக்பரும் உறவினர்களும் திருமணம் செய்து கொண்டனர்.
- பல்வேறு பிரிவுகளை உட்படுத்தி இராணுவத்தை வலுவடையச் செய்தார்.



**தன்னுடைய ஆட்சி நடவடிக்கை வழியாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆட்சியாளராக மாறுவதற்கு அக்பரால் இயன்றது. நிறுவவும்.**

## தீன் – இ – இலாகி (தௌகித் – இ – இலாகி)



அக்பர் பல்வேறு மதப்பண்டிதர்களுடன் இபாதத்கானாவில் கருத்துப் பரிமாற்றம் செய்ததன் படம்

நாட்டில் பல்வேறு பிரிவு மக்களுக்கிடையே சமாதானமும், நட்பும், ஒற்றுமையும் வளரச் செய்வதற்கு அக்பர் விரும்பினார். கருத்து விவாதங்கள் நடத்துவதற்காக அவர் தலைநகராமாகிய பத்தேபூர் சிக்ரியில் இபாதத் கானாவை உருவாக்கினார். அங்கு நடைபெற்ற விவாதங்களின் உட்கருத்தை உட்படுத்தி அக்பர் உருவாக்கிய கருத்துக்கோர்வை தான் தீன் – இ – இலாகி. இது பல்வேறு மதங்களின் கருத்துகளும், பல்வேறு தத்துவக் கோர்வைகளும் இணைந்ததாகும். இதில் பங்காளிகளாவதற்கு அக்பர் யாரையும் கட்டாயப் படுத்தவில்லை. நுழைவுச் சடங்குகள் தவிர ஆசாரங்கள், மத இலக்கியங்கள், வழிப்பாட்டுத் தலங்கள், மதக்குருக்கள் போன்றவை தீன் – இ – இலாகிக்கு இல்லை. சுல்க் – குல் (Sulh-kul) அல்லது அனைவருக்கும் சமாதானம் என்பதே இதன் அடிப்படை.

**அக்பர் உருவாக்கிய தீன் – இ – இலாகி நிலையான ஆட்சிக்கும், மத ஒற்றுமைக்கும் எவ்வாறு உதவியது? பகுப்பாய்வு செய்யவும்.**

## மான்சப்தாரி முறை

வலிமையான இராணுவ அமைப்பு தான் மொகலாயர் ஆட்சியில் அடிப்படை ஆகும். ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும், பேரரசை விரிவுபடுத்துவதற்கும் பேரரசருக்கு இராணுவத்துடன் பிரபுக்களுடையவும் அதிகாரிகளுடையவும் அதரவும் தேவைப்பட்டது. இந்த இலக்கை அடைவதற்கு அக்பர் கையாண்ட முறையே மான்சப்தாரி முறை.

'மான்சப் என்ற சொல்லின் பொருள் மொகலாக இராணுவ அதிகாரியின் பதவி என்பதாகும். இந்த பதவியை வகித்தவர்கள் மான்சப்தார் என்று அறியப்பட்டனர். மான்சப்தார் முறையின் வழியாக அதிகாரிகளின் பதவி, ஊதியம் இராணுவ கடமை ஆகியவை வகைப்படுத்தி நிர்ணயிக்கப்பட்டது. மான்சப்தாரி நிலைநிறுத்தியிருந்த குதிரைப்படை வீரர்களுடையவும், குதிரைகாரர்களுடையவும் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவி நிர்ணயிக்கப் பட்டது. முப்பதுக்கு மேலான பதவி களிலான பத்து முதல் பத்தாயிரம் குதிரைகள் வரை உள்ள மான்சப்தாரிகள் அக்பரின் இராணுவத்தில் இருந்தனர். இதற்கு



மொகாலய ராணுவ ஆயுதங்கள்

மேலாக 'சத்' (Zat), 'சவர்' (Sawar) என இரு பதவிகளும் இருந்தன. சத் என்ற சொல்லின் பொருள் நபர் என்பதாகும். அது ஒரு நபரின் இராணுவத்தின் பதவியையும் வருமானத்தையும் குறிப்பிடுகிறது. சவர் என்பது ஒருவர் பாதுகாக்க வேண்டிய குதிரை வீரர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.

**பேரரசரின் அதிகாரத்தை உறுதிசெய்வதற்காக நடைமுறைப்படுத்திய நடவடிக்கைதான் மான்சப்தாரி முறை – நிறுவவும்.**

## ஜாகிர்தாரி முறை

மொகலாயப் பேரரசர்கள் ஆட்சியைச் செயல்திறனுடையதாக்குவதற்கு நடைமுறைப்படுத்திய வேறொரு சீர்திருத்தம் தான் ஜாகிர்தாரிமுறை. சுல்தான்கள் காலத்தில் இக்தாவின் உயர்ந்த வடிவம்தான் ஜாகிர்தாரி. இது மான்சப்தார்களுக்கு சம்பளத்திற்குப் பதிலாக நிலத்தை வழங்கும் முறையாகும். இவ்வாறு வழங்கப்பட்ட நிலம் ஜாகிர் என்றறியப்பட்டது. ஜாகிர் நிலத்தின் உடைமை உரிமை மட்டுமே அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டது. அவர்களை ஜாகிர்தார் என அழைத்தார். இக்தா முறையைப் போன்று ஜாகிர் முறையிலும் ஜாகிர்தார்கள் அவர்களுக்குக் கிடைத்த நிலத்தில் தங்குவதோ ஆட்சி நடத்துவதோ இல்லை. ஜாகிர்தாரி பதவி பரம்பரையானது அல்ல. அவர்களை மன்னர் இடம் மாற்றி நியமித்திருந்தார். குறிப்பிட்ட நிலத்தில் வரி வசூலித்து அதைப் பயன்படுத்துவதற்கு என்பது மட்டுமே அவர்களுடைய அதிகாரமாக இருந்தது.

**சுல்தான் ஆட்சியில் நிலைநின்ற இக்தா முறைக்கும் ஜாகிர்தாரி முறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?**

## சோழர் ஆட்சி

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தென்னிந்தியாவின் முக்கியமான வலிமைமிக்க ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் சோழர் களாவர். சர்வாதிகாரியான மன்னர் ஆலோசகரான அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் சேர்ந்த ஒரு மத்திய ஆட்சிக்கூடம் மன்னராட்சியை நிர்வகித்தது. மன்னராட்சியின் பின்தொடர்ச்சி உரிமை மக்கத்தாய முறையில் இருந்தது. அரசரின் கட்டளைப்படியே ஆட்சி கட்டுப்படுத்ததப்பட்டது. ஒலைநாயகம் என்று அறியப் பட்ட முக்கிய அதிகாரி அரசக் கட்டளைகளைப் பிற அதிகாரிகளுக்குக் கொண்டு கொடுப்பார். வலிமையான

**கடற்படை**

சோழமன்னர்கள் வலிமையான ஒரு படையை வைத்திருந்தனர். அக்காலத்தில் மிக வலிமையான கடற்படை சோழர்களுடைய தாகும். வங்கக் கடல் சோழர்களின் தடாகம் என்றறியப்பட்டது. மலேஷியா, இந்தோனேசியா, சிலோன் போன்ற பகுதிகளில் சோழப் பேரரசு பரவியது. அதற்கான முக்கிய காரணம் அவர்களுடைய கடற்படையின் வலிமையாகும்.

கடற்படையுடன் உள்ள இராணுவ அமைப்பு இருந்தமை சோழர் ஆட்சியின் மற்றொரு சிறப்பாகும்.

## கிராம உள்ளாட்சி

> "உத்தரமேரூர் சதுர்வேதி மக்கலம் கிராசபைக் கூடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலம் கிராமசபை, அறிக்கையில் உள்ள குறிப்புகளின் படி வருடசபை, தோட்ட பாதுகாப்பு சபை, நீர்த்துறைசபை ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது".
>
> (உத்திரமேரூர் அறிக்கையின் ஒரு பகுதி)



*உத்தரமேரூர் சாசனம்*

சோழர் ஆட்சியின் முக்கிய சிறப்பான கிராம உள்ளாட்சியைக் குறிப்பிடுகின்ற உத்தரமேரூர் அறிக்கையின் ஒரு பகுதி மேலே கொடுக்கப்பட்டுள்ளது. சோழர் ஆட்சியில் கிராம உள்ளாட்சியின் சிறப்பம்சங்கள் எவையெனப் பார்ப்போம்.

ஆட்சி வசதிக்காக சோழ மன்னர்கள் நாட்டை மண்டலங்கள், வளநாடுகள், நாடுகள் கோட்டம் எனப் பிரித்தனர். உள்ளாட்சி அதிகாரமுள்ள கிராமங்களின் சமூகம் தான் கோட்டம் கிராம ஆட்சியுடன் தொடர்புடைய எல்லா பொறுப்புகளும் கிராம ஆட்சிக்காக ஊர், சபை ஆகிய இரு குழுக்கள் செயல்பட்டன. கிராமத்திலுள்ள எல்லா மக்களும் உட்பட்டது தான் ஊர். பிராமணர்கள் மட்டும் உட்பட்டதுதான் சபை. கோவில்களின் அருகில் இந்தக் குழுக்கள் கூடப்பட்டன. சபையின் சிறப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- சபையில் செயல்பாட்டிற்கானத் தனிப்பட்ட சட்டங்கள் இருந்தன.
- ஆட்சி நிர்வாகத்திற்காக சபையைப் பல பஞ்சாயத்துகளாகப் பிரித்து, பொறுப்புகள் வழங்கப்பட்டது.
- தேர்தல் வழியாகவும் குலுக்கல் வழியாகவும் பஞ்சாயத்து உறுப்பினர்களைத் தீர்மானித்தனர்.
- உறுப்பினர்களை வருடம் தோறும் தேர்வு செய்தனர்.
- ஒருவருக்குத் தொடர்ச்சியாக மூன்று முறை மட்டுமே உறுப்பினராயிருப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

- லஞ்சம், திருட்டு போன்ற குற்றங்கள் சுமத்தப்படுவர்களுக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு உரிமை இல்லை.
- சபையிலுள்ள உறுப்பினர்கள் பெருமக்கள் எனவும் பஞ்சாயத்திலுள்ள உறுப்பினர்கள் வாரியப்பெருமக்கள் எனவும் அறியப்பட்டனர்.

கிராம ஆட்சியுடன் தொடர்புடைய எல்லா பொறுப்புகளும் அதிகாரங்களும் சபைக்கு உட்பட்டு இருந்தன. அவற்றின் அதிகாரங்கள் எவையெனப் பார்ப்போம்.

- கோவில்களுக்கான நிலத்தை வாங்குவது.
- நிலத்தை அளந்து திட்டப்படுத்தி வரி வசூலிப்பது.
- மக்கள் நலனுக்கானப் பொதுச் சேவைகள் செய்தல்.
- பதிவேடுகளையும் கணக்குகளையும் பாதுகாத்தல்.
- கிராமத்தில் நீதி நியாயங்களை நிலைநாட்டுதல்.

கேரளத்தின் உள்ளாட்சியுடன் சோழர்களின் கிராம உள்ளாட்சியை ஒப்பிட்டுக் குறிப்பு தயாரிக்கவும்.



## விஜயநகரப் பேரரசு



கிருஷ்ண தேவராயரின் சிலை




தென்னிந்தியாவில் ஆட்சி செய்த விஜயநகரப் பேரரசைக் குறித்து முன் வகுப்புகளின் விவாதித்து நினைவிருக்கிறதல்லவா? ஓர் ஆட்சியமைப்பில் மன்னருக்கு எந்த அளவு முக்கியத்துவம் உண்டு என்பதைக் குறிப்பிடுகின்ற

கிருஷ்ணதேவராயரின் வார்த்தைகளே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட மன்னராட்சி விஜயநகரப்பேரரசில் காணப்பட்டது. வலிமையான இராணுவ பலம் மன்னருக்கு இருந்தது. எதிரிகளிடமிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு பெரிய கோட்டைகளை அவர்கள் கட்டினர். விஜயநகரப் பேரரசின் மைய ஆட்சி நாயங்கர முறை எனவும் வட்டார ஆட்சி ஐயகார் முறை எனவும் அறியப்பட்டது. அவற்றின் சிறப்புகள் எவையெனப் பார்ப்போம்.


பேலூர் கோட்டை

## நாயங்கர முறை

விஜய நகரப் பேரரசில் மையஆட்சியின் தலைவர் மன்னராக இருந்தார். மன்னருக்கு உதவுவதற்கு அமைச்சர்களும் அரச அதிகாரிகளும் இருந்தனர். பொதுவாகச் சிறிய இராணுவம் தான் மன்னரின் நேரடியான கட்டுப்பாட்டில் இருந்தது. பிரவிஷ்யா ஆளுநர்கள் தங்களுடையதான குறிப்பிட்ட தேவைப்படும் போது அவர்கள் இராணுவத்தை விட்டுக்கொடுத்தனர். இராணுவத் தலைவர்களாயிருந்த இவர்க்களுக்கு மன்னர் நாயக் என்ற பதவியும் குறிப்பிட்ட இராணுவத்தைப் பாதுகாத்து வந்தனர். மன்னருக்கு நிலமும் வழங்கியிருந்தார். மையத்தில் நிலைநின்ற இந்த ஆட்சிமுறை நாயங்கர முறை என்றறியப்பட்டது.

### விஜயநகர அரச வம்சங்கள்

சங்கம, சாலுவ, துளுவ, அரவீடு ஆகிய நான்கு அரச வம்சங்கள் விஜயநகரத்தை ஆட்சி செய்தனர். கிருஷ்ண தேவராயர் துளுவ வம்சத்தில் ஆட்சியளாராக இருந்தார்.

## ஐயங்கார் முறை

ஆட்சியின் வசதிக்காக பேரரசு, பிரவிஷ்யகள், நாடுகள், கிராமங்கள் எனப் பலவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கிராமம் தான் அடிப்படைக் காரணி. சோழர் ஆட்சியைப் போன்று இங்கேயும் கிராமசபைகள் செயல்பட்டன. பரம்பரை தொழில்செய்த ஐயங்கார்கள் அன்றாட கிராம ஆட்சியை நிர்வகித்தனர். இந்த ஆட்சிமுறை ஐயங்கார் முறை என்றறியப்பட்டது. மைய ஆட்சியில் நாயக பதவிக்கு இணையானதே கிராம ஆட்சியில் ஐயங்கார்களின் பதவி.

# மராட்டிய ஆட்சி


சிவாஜி

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆட்சி செய்த மராட்டிய நாட்டைக் குறித்து நீங்கள் முன்பு புரிந்து கொண்டுள்ளீர்கள் அல்லவா? இடைக்கால இந்தியாவின் பிற ஆட்சியாளர்களைப் போன்று சட்ட உருவாக்கம், செயல் உருவாக்கம், நீதித் துறை இராணுவம் போன்ற எல்லா அதிகாரங்களையும் மராட்டிய ஆட்சியில் பேரரசர் கட்டுப்படுத்தி இருந்தார். மராட்டியில் ஆட்சியாளராக இருந்த சிவாஜிக்கு ஆட்சியில் உதவிய அஷ்டபிரதான் என்ற குழுவிலுள்ள பல்வேறு அமைச்சர்களையும் அவர் களுடைய பொறுப்புகளையும் விளக்கு கின்ற படத்தைப் பாருங்கள்.




அஷ்டபிரதானிலுள்ள பல்வேறு அமைச்சர்களின் துறைகளை ஆராய்ந்து அவற்றை இன்றைய ஆட்சியின் பல்வேறு துறைகளோடு ஒப்பிட்டு குறிப்பு தயாரிக்கவும்.



இதிலிருந்து வலிமையான ஓர் அமைச்சரவையின் ஆதரவு உள்ள மையஆட்சி மராட்டிய ஆட்சியில் இருந்ததைப் புரிந்து கொள்ளலாம். அமைச்சர்கள் ஆலோசகராக மட்டுமல்ல. அவர்களுடைய பதவிகள் பரம்பரையானதும் அல்ல. மராட்டிய ஆட்சியின் வேறு சில சிறப்புகளையும் பார்ப்போம்.

- அதிகாரிகளைக் குறித்தும் அரசகாரியங்களைக் குறித்தும் புரிந்து கொள்வதற்கு வலிமையான உளவுத்துறையைப் பயன்படுத்தினர்.
- வட்டார ஆட்சி நிலைநின்றது.

### சத்திரபதி

1674 இல் ராய்கட் கோட்டையில் வைத்து சிவாஜியின் பதவியேற்பு நடைபெற்றது. அதற்குப் பின் அவர் சத்திரபதி என்ற பெயரை ஏற்றார்.


*ராய்கட் கோட்டை*

## மராட்டிய ஆட்சியில் வட்டார ஆட்சி

மாராட்டிய பேரரசை ஆட்சியின் வசதிக்காக பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தனர். அவை பிரவிஷ்யகள், ஜில்லாக்கள் (பிராந்தியங்கள்), பர்கானாக்கள், கிராமங்கள் ஆகிய வகைகளாகும். மன்னர் நேரடியாக அதிகாரிகளை நியமித்தார். இவை தவிர சுராஜ்ய, மொகாளை எனவும் நாட்டை இரண்டாகப் பிரித்திருந்தனர். மராட்டியர்களில் நிலப்பகுதியே சுராஜ்யம் பிறரிடமிருந்து கைப்பற்றிய பகுதிகள் தான் மொகளை மராட்டிய நாட்டிலிருந்து (சுவராஜ்யம்) வசூலிக்கப்பட்ட வரியுடன், கீழடக்கியப் பகுதிகளிலிருந்தும் (மொகளை) கட்டாயமாக சௌது, சர்தேஷ்முகி ஆகிய இரு வகையான வரிகளை வசூலித்தனர்.

> இடைக்கால இந்தியாவில் நிலைநின்ற ஆட்சி அமைப்புகளிலிருந்து மராட்டிய ஆட்சி எவ்வாறு வேறுபட்டுள்ளது? விவாதம் செய்யவும்.

இந்தியாவில் நடைமுறையிலிருந்த ஆட்சி முறைகளில் அடிப்படையான எராளம் மாற்றங்கள் இடைக்காலத்தில் உருவானது. அன்றைய ஆட்சியாளர்கள் உருவாக்கியப் பல ஆட்சிமுறைகளுடையவும் தாக்கம் பிற்கால ஆட்சி முறைகளில் பார்க்க முடிகிறது.

> இடைக்காலத்தில் இந்தியாவில் நிலைநின்ற வெவ்வேறு ஆட்சி முறைகளைக் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தவும்.

## இடைக்கால இந்தியா : அரச கட்டளையும் ஆட்சிமுறையும்

- **சுல்தான் ஆட்சி**
  - மைய ஆட்சி ↓
  - வட்டார ஆட்சி ↓
  - இக்தா முறை ↓
  - அங்காடிச் சீர்திருத்தம்
- **மொகலாய ஆட்சி**
  - மையஆட்சி ↓
  - வட்டார ஆட்சி ↓
  - தீன்-இ- இலாகி ↓
  - மான்சப்தாரி ↓
  - ஜாகிர்தாரி
- **சோழர் ஆட்சி**
  - மைய ஆட்சி ↓
  - கிராம உள்ளாட்சி
- **விஜய நகர ஆட்சி**
  - மைய ஆட்சி (நாயங்கர முறை) ↓
  - வட்டார ஆட்சி
  - (ஐயங்கார் முறை)
- **மராட்டிய ஆட்சி**
  - மைய ஆட்சி (அஷ்ட பிரதாள்) ↓
  - வட்டார ஆட்சி



### முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- சுல்தான் ஆட்சிமுறையின் சிறப்பம்சங்களைப் பிரித்தறிகின்றனர்.
- சுல்தான் ஆட்சியினுடையவும், மொகாலாய ஆட்சியினுடையவும் சிறப்புக்களை ஒப்பீடு செய்கின்றனர்.
- மான்சப்தாரி முறையை பகுப்பாய்வு செய்து மொகாலாய ஆட்சியில் இராணுவ அமைப்பின் சிறப்புகளைக் கண்டறிகின்றனர்.
- இடைக்காலத்தில் தென்னிந்தியாவை ஆண்ட சோழ மன்னர்களின் ஆட்சியின் சிறப்புகளை விளக்குகின்றனர்.

- சோழர் காலத்தில் நிலைநின்ற கிராமிய உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்புகளைப் பிரித்தறிந்து இன்றைய பஞ்சாயத்து ராஜ், நகர பாலிகா அமைப்புகளுடன் ஒப்பீடு செய்கின்றனர்.
- விஜயநகரப் பேரரசில் நிலைநின்ற ஆட்சிமுறையின் சிறப்புகளை விளக்குகின்றனர்.
- மராட்டிய ஆட்சி அமைப்பின் சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.



## மதிப்பிடலாம்

- இந்தியாவில் ஒரு மைய ஆட்சியை நடைமுறைப்படுத்துவதற்கு சுல்தான் ஆட்சியாளர்களைத் தூண்டிய சூழல்கள் யாவை?
- அக்பர் உருவாக்கிய மான்சப்தாரி முறையின் சிறப்புகளை மதிப்பிடவும்.
- எ பிரிவுக்கு பொருத்தமானவற்றை பி பிரிவிலிருந்து கண்டுபிடித்து அட்டவணையை ஒழுங்கு செய்யவும்.

| எ | பி |
|---|---|
| மான்சப்தாரி முறை | சோழர் ஆட்சி |
| இக்தா முறை | சிவாஜி |
| கிராம உள்ளாட்சி | கிருஷ்ண தேவராயர் |
| அஷ்ட பிரதான் குழு | சுல்தான் ஆட்சி |
| அமுக்த மாலியதா | அக்பர் |

- விஜய நகர ஆட்சியில் செயல்படுத்திய நாயங்கர ஐயங்கார் அமைப்புகளைக் குறித்து குறிப்பு தயாரிக்கவும்.
- மராட்டிய ஆட்சியில் நடைமுறையிலிருந்த அஷ்டபிரதான் குழுவைப் பற்றி சிறுகுறிப்பு தயாரிக்கவும்.

## தொடர் செயல்பாடுகள்

- இடைக்காலத்தில் இந்தியாவில் நிலைநின்ற பல்வேறு ஆட்சி முறைகளைக் குறித்து ஒரு கட்டுரை தயாரிக்கவும்.
- இணையதளத்தின் உதவியுடன் இடைக்கால இந்தியாவின் முக்கிய அதிகாரிகளுடையவும், ஆட்சி மையங்களுடையவும் பேரரசுளுடையவும் படங்களைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் ஆல்பம் உருவாக்கவும்.



அலகு

# 05

# செல்வமும், சமூகமும்

> **உலகளாவிய வியாபாரம் வழியாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்ற தங்கமும் வெள்ளியும் கடைசியில் சென்றடைவது இந்தியாவிலாகும். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பியர்கள் சேகரித்த தங்கமும் வெள்ளியும் வியாபாரத்தின் வழி துருக்கியிலும், பாரசீகத்திலும் சென்றடைகிறது. கடைசியில் அங்கிருந்து இந்துஸ்தானுக்கு....**
>
> **– ஜியோவனி செராரி**

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த இத்தாலிய யாத்திரிகர் ஜியோவனி செறாரியன் உடைய ஆராய்ச்சி குறிப்பே மேலே கொடுக்கப் பட்டுள்ளது.

அக்காலத்தில் இந்தியா உலக வியாபாரத்தின் முக்கிய மையமாக இருந்தது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம் அல்லவா? பயிர்த்தொழில் முன்னேற்றம் வழியாகப் பெற்றுக்கொண்ட செல்வம்தான் உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள வியாபாரிகளை இந்தியாவுக்கு கவர்ந்தது. அக்காலத்தில் இந்தியா எவ்வாறு பயிர்த்தொழிலில் முன்னேற்றம் அடைந்தது எனப் பார்ப்போம்.

# மத்தியகால இந்தியாவின் வேளாண் வளர்ச்சி

பதினான்காம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த இப்னுபத்தூதா என்பவர் அன்றைய வேளாண் முன்னேற்றத்தைக் குறித்து கித்தாபுல் -ரிக்லா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். வயல்களில் வருடத்திற்கு மூன்று முறை வேளாண்மை செய்திருந்ததாக அந்த நூலில் கூறப்பட்டுள்ளது. நெல், கோதுமை, பார்லி, கரும்பு, பருத்தி, எண்ணெய் விதைகள் அவுரிச்செடி ஆகியவற்றை முக்கியமாக வேளாண்மை செய்திருந்தனர். ஆட்சித்தலைவர்கள் வேளாண் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்தனர். சுல்தான்களின் ஆட்சியாளாராக இருந்த பால்பன் வேளாண் வளர்ச்சிக்காக தொவாப் என்ற பகுதியை (கங்கை, யமுனா, நதிகளுக்கு இடைப்பட்ட பகுதி) விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். பெரோஸ் ஷா துக்ளக் என்பவர் நீர் கிணறுகளை உருவாக்க விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கினார். யமுனா நதியிலிருந்து வேளாண் நிலங்களுக்குத் தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு வாய்க்கால்களை அமைத்தார். இதன் விளைவாக உற்பத்தியின் அளவும், செல்வமும் பெருகியது.

### பலவகையான நெல்விதைகள்

முகலாயர் ஆட்சிகாலத்தில் டெல்லியில் மட்டும் 48 வகையான நெல்வகைகளைப் பயிரிட்டனர். வங்காளத்தில் 50 வகைகள் அவற்றில் பலவகைகள் இன்றும் விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன. அக்காலத்தில் உள்ள பல நெல்வகைகளும் கடும் வறட்சி, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றை எதிர்கொள்ளும் திறனை உடையதாகும்



*பேர்சியன் நீர்ச்சக்கர மாதிரி*

டெல்லியிலும் வங்காளத்திலும் பயிரிடப்பட்டிருந்த வெவ்வேறு வகையிலான நெல்களைப் பற்றி அபுல் பசல் குறிப்பிடுகின்றார். ஆக்ராவில் 39 வகையான நெல்களைப் பயிர் செய்ததாக அவர் ஐனி-அக்பரியில் குறிப்பிடுகிறார்.

ஸ்பெயின், ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சோளம் மேற்கு இந்தியாவின் முக்கியப் பயிராக மாறியது. தக்காளி, உருளைக்கிழங்கு, மிளகு, அன்னாசி, பப்பாளி போன்றவையும் இந்தியாவில் அறிமுகமானது.

புதிய கருவிகளுடையவும் தொழில்நுட்பத்தினுடையவும் உபயோகம் வேளாண் வளர்ச்சிக்கு வேகமூட்டியது. கருவிகளில் முக்கியமானது நீர்ப்பாசனத்திற்கான பேர்சியன் சக்கரமாகும். இரும்புக் கொழு இணைக்கப்பட்டுள்ள எடை குறைந்த கலப்பையும், விதை விதைப்பதற்காக டிரிட்ல் என்ற கருவியும் அக்காலத்தில் பயன்படுத்தியிருந்தனர். காளைகளைப் பயன்படுத்தி இவற்றை செயல்படுத்தினர்.

இடைக்கால இந்தியாவின் வேளாண்வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை முழுமையாக்குங்கள்.

| பயிர்கள் | ஆட்சித்தலைவர்களின் நடவடிக்கைகள் | கருவி |
|---|---|---|
| • <br> • <br> • <br> • <br> • | • <br> • | • <br> • <br> • |

இடைக்காலத்தில் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் ஆண்டு கொண்டிருந்த சோழ மன்னர்களும் வேளாண் வளர்ச்சிக்கு ஏராளமான நடவடிக்கைகளை கைக்கொண்டிருந்தனர். தென்னிந்தியாவில் வேளாண் வளர்ச்சிக்கு உதவிய காரணிகள் எவையென்பதைப் பார்ப்போம்.



*சோழர்காலத்தில் நீர்பாசனத்திற்கு பயன்படுத்திய நீர்நிலை*

- காவிரிநதியிலுள்ள நீர்வளம்
- வாய்க்கால் வழியாக வரக்கூடிய வண்டல் மண்
- நீர்ப்பாசனத்திற்காக சோழமன்னர்கள் உருவாக்கிய வாய்க்கால்கள்.
- அக்காலத்தில் கிராமத்தை ஆட்சி செய்த சபைகளுக்கு கீழாக வேளாண் வளர்ச்சிக்குச் செயல்பட்ட குழுக்கள்.

**தென்னிந்திய சோழர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பயிர்த்தொழில் முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்க.**

**பலவகை வேளாண் நிலங்கள்**

சோழர் ஆட்சிக்காலத்தில் வரலாற்று உறைவிடங்கள் அளிக்கும் தகவல்களின் படி அக்காலத்தில் நான்கு வகையிலான விளை நிலங்கள் இருந்தன.

பிரம்மதேயம் – பிராமணர்களுக்குத் தானமாகக் கிடைக்கும் நிலம்
தேவதானம் – ஆலயங்களுக்குக் கிடைத்த நிலம்
வெள்ளாண் வகை – விவசாயிகளிடமுள்ள நிலம்
பள்ளிச்சாண்டம் – சமண மத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிலம்.

## சிறுதொழிலும் கைவினைத்தொழிலும்

வேளாண்மை தவிர வேறு என்னென்ன தொழில்களை இடைக்கால இந்தியாவின் மக்கள் செய்து வந்தனர் என்பதைப் பார்ப்போம்.

வேளாண் உற்பத்திப் பொருட்களைச் சார்ந்து ஏராளமானத் தொழில்கள் நிலைநின்றன. எடுத்துக்காட்டாக, எண்ணெய் விதைகள், நீலம், பருத்தி ஆகியவை எண்ணெய் ஆட்டுதல், சர்க்கரை உருவாக்கம், துணி நெய்தல், சாயம் முக்குதல் ஆகிய சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தது. அவற்றுள் முக்கியமானது துணி நெய்தல் ஆகும்.

## பண்டைக்கால ராட்டை (சக்கரம்)



ராட்டைக் குறித்து முதலாவதாக 1350இல் இசாம் எழுதிய புத்துகூ சலாத்தீன் என்ற நூலின் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே கொடுக்கப்பட்டுள்ள ராட்டையின் படம் பதினைந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள மிப்தகுல் பசலா என்ற நூலில் உள்ளது.

துணி உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்கு உதவிய முக்கிய காரணி ராட்டையின் (சக்கரம்) பயன்பாடாகும். பதினான்காம் நூற்றாண்டில் இந்தியாவில் ராட்டையினைப் பயன் படுத்துவதற்குத் தொடங்கினர். சீனாவிலிருந்து தான் இந்தியர்கள் இந்த தொழில் நுட்பத்தைச் சொந்தம் ஆக்கிக் கொண்டனர். ராட்டையின் பயன்பாட்டுடன் நூல் உற்பத்தியில் ஆறு மடங்கு உயர்வு ஏற்பட்டது.

நூல் நூற்பதுடன் நெய்வதிலும் அக்காலத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. மிதித்து செயல்படுத்துகின்ற தறியின் (100m) கண்டுபிடிப்பு துணி உருவாக்கத் துறையில் பெரிய மாற்றத்தை உருவாக்கியது. பட்டுநூல் புழுக்களிலிருந்து நூல் உருவாக்குகின்ற தொழில் நுட்பமும் அக்காலத்தில் இருந்தது. பதினான்காம் நூற்றாண்டில் வங்காளத்தில் இது ஆரம்பமானது.

திரை, காகிதம் ஆகியவற்றின் உருவாக்கமே கைவினைப் பொருட்களின் துறையின் பிற தொழில்களாகும். இந்தியா வில் உருவாக்கப்பட்ட திரைகள் (பரவதானிகள்) வெளிநாட்டு வாணிப மையங்களிலும் புகழ் பெற்றிருந்தது.



*சாம்பார் தடாகத்தில் உப்பு உருவாக்கம்*

பதிமூன்றாம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் காகிதத்தின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டது. உலோகத்தைப் பிரித்தெடுத்தல், சுரங்கத்தொழில் துறைகள் ஆகியவை அக்காலத்தில் முன்னேற்றம் அடைந்தது. உலோகத்தைப் பிரித்தெடுத்தல் துறையில் செயல்பட்டவர்கள் முக்கியமாக உருவாக்கியது வேளாண் கருவிகளும் யுத்தக் கருவிகளுமாகும். இரும்பினால் செய்யப்பட்ட லாடம் (Horse Shoe) சவாரி செய்பவர்களுக்கு கால் வைப்பதற்கு குதிரையின் முதுகில் தொங்க விடப்படுகின்ற இரும்பு அங்கவடி ஆகியவை யுத்தக் களத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்கிறது. இராஜஸ்தானிலிருந்து செம்பும், கொல் கொண்டாவிலிருந்து, இரத்தினமும் தோண்டி எடுத்தனர். உப்பு தயாரித்தல் முன்னேற்றம் அடைந்த ஒரு தொழிலாக இருந்தது. கடற்கரைகள், உப்புப்பாறைகள், உப்பு தடாகங்கள் ஆகியன உப்பின் உறைவிடங்களாக இருந்தன. மேற்குப் பஞ்சாப், இராஜஸ்தானிலுள்ள ராம்பார் போன்றவை உப்பு தயாரிக்கப்படும் மையங்களாக இருந்தன.

தொழில்நுட்பத்தில் உருவான வளர்ச்சி தொழில்துறைக்கு எவ்வாறு உதவியது? விவாதித்து குறிப்பு எழுதவும்.

# வாணிபமும் வியாபாரமும்

உற்பத்தித் துறையில் உருவான எச்சம் வாணிப வளர்ச்சிக்கு உதவியது. இந்தியாவின் வாணிப மையங்கள் உலகின் நான்கு திசையிலும் உள்ள மக்களைக் கவர்ந்தது. மத்திய கால அளவில் இந்தியாவுடன் வாணிபம் செய்த முக்கிய நாடுகள் அட்டவணையில் உள்ளது.

- சுமாத்ரா, ஜாவா (இந்தோனேஷியா)
- சீனா
- பாரசீகம் (ஈரான்)
- போர்ச்சுக்கல்
- ஹாலந்து
- இங்கிலாந்து
- பிரான்ஸ்

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள நாடுகளை நிலப்படத்தொகுப்பின் உதவியுடன் உலக நிலப்படத்தில் கண்டுபிடித்து எழுதவும்.





அக்காலத்தில் தரைவழியாகவும், கடல்வழியாகவும் இந்தியாவுக்கு வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு இருந்தது. தரைவழியான இரு முக்கிய வாணிப முறைகள் தான் லாகூரில் (இன்றைய பாகிஸ்தான்) இருந்து காபூலுக்கும் (இன்றைய ஆப்கானிஸ்தான்) முள்த்தானில் (இன்றைய பாகிஸ்தான்) இருந்து காண்டகாருக்கும் (இன்றைய ஆப்கானிதான்) உள்ள வழிகள். கடல் வழியான வாணிபம் கடற்கரை வாணிபம் என அறியப்பட்டது. காம்பை, புரோச், சூரத், கோவா, நாகப்பட்டினம், மசூலிப்பட்டணம், கோழிக்கோடு, கொல்லம் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக இருந்தது.

இடைக்காலத்தின் முக்கிய துறைமுகங்களைக் கண்டுபிடித்து இந்திய நிலப்படத்தில் அடையாளப்படுத்தவும். இன்று அவை எந்தெந்த மாநிலங்களில் அமைந்துள்ளன?



அன்றைய முக்கிய வணிகப்பிரிவுகளையும் அவர்கள் ஈடுபட்டுள்ள துறைகளையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்வோம்.

**வணிகப்பிரிவுகள்**

- மார்வாடிகள், குஜராத்திகள் — கடற்கரை வாணிபம்
- முள்த்தானிகள், குராசானிகள் — தரைவழி வாணிபம்

பருத்தி ஆடைவகைகள் நீலம், உப்பு, சீனி ஆகியவை முக்கியமாக இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. உலோகங்கள், தோல், வெல்வெட், உலர் பழங்கள், குதிரைகள் ஆகியவை முக்கியமாக இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியர்கள் வழியாக மத்திய ஆசிய நாடுகளிலிருந்து குதிரைகளை இந்தியாவுக்கு இறக்குமதி செய்திருந்தனர். குதிரைகளை வியாபாரம் செய்தவர்கள் தென்னிந்தியாவில் குதிரைச் செட்டிகள் என்ற பெயரில் அறியப்பட்டனர். பண்டைக்கால அரேபியர்கள்தான் இந்த வியாபாரத்தில் முக்கியமானவர்கள். போர்ச்சுக்கீசியர்களின் வருகையுடன் அரேபியர்கள் தள்ளப்பட்டு அந்த இடத்தைப் போர்ச்சுக்கீசியர்கள் கைப்பற்றினர்.

1498 இல் வாஸ்கோடகாமா கோழிக்கோடு வந்ததோடு இந்தியாவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையில் நேரடியான வியாபாரம் துவங்கியது. போர்ச்சுக்கீசியரைத் தொடர்ந்து, டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுகாரர்களும் வாணிபத்திற்காக இந்தியாவுக்கு வந்தனர். வாசனைத் திரவியங்கள், ஆடைவகைகள், நீலம், சீனி, உப்பு ஆகியவற்றை இந்தியாவிலிருந்து முக்கியமாக சேகரித்தனர். முன்கால வாணிபத்திலிருந்து இக்காலத்தில் உருவான முக்கிய மாற்றம் என்பது ஐரோப்பியர்கள் வியாபார குத்தகைக்காக ஒன்றுக்கொன்று போட்டியிடவும் இந்தியாவை ஏகாதிபத்திய போர்களுக்கு அரங்கமாக்கவும் செய்தனர் என்பதாகும். இந்த போட்டியில் வெற்றி பெற்றது ஆங்கிலேயர்களாகும்.



**உல்லுகும் தாவயும்**

இந்தியாவில் நிலைநின்ற இருவகையிலான தபால் முறைகள் தான் உல்லுகுவும், தாவயும் உல்லுக் என்றறியப்படும் முறையில் குதிரைகளைப் பயன்படுத்தி தபால்களைக் கைமாறினர். தாவ என்பது கால்நடை வழியான தபால் முறையாகும். இதில் ஒவ்வொரு மைலுக்கும் மூன்று மையங்கள் வீதம் இருந்தன.

வியாபார வளர்ச்சிக்காக ஆட்சியாளர்கள் பல்வேறு நடவடிக்கைகளைக் கொண்டிருந்தனர். அவற்றுள் சில

- முக்கிய நகரங்களை இணைக்கும் சாலைகளை உருவாக்கினர்.
- வியாபாரிகளுக்குக் கடன் வழங்கினர்.
- சராயிகள் (ஓய்வுமையங்கள்) கட்டினர்.

- ஒருங்கிணைந்த வரிமுறையை நடைமுறைப்படுத்தினர்.
- தபால் துறையைச் செயல்திறனுடையதாக மாற்றினர்.
- செயல்திறனுடைய நாணயமுறையை நடைமுறைப்படுத்தினர்.

சுல்தான்களின் காலத்திலேயே செயல்திறனுடைய ஒரு நாணய அமைப்பு நிலை நின்றிருந்தது. தங்க என்ற வெள்ளி நாணயமும் ஜிதல் என்ற செம்பு நாணயமும் அக்காலத்தில் நடைமுறையில் இருந்தன. ஷேர்ஷா நாணய அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வந்தார். அவர் வெளியிட்ட வெள்ளி நாணயமான ரூபி நீண்டநாட்கள் நிலைநின்றது. அக்பர் சக்கரவர்த்தி ஜலாலி என்ற பெயரில் வெள்ளி நாணயமும் இலாகி என்ற தங்க நாணயமும் பைசா என்ற செம்பு நாணயமும் வெளியிட்டார்.



*இடைக்கால இந்தியாவில் நடைமுறையிலிருந்த நாணயங்கள்*



இடைக்கால வியாபாரத்தின் வளர்ச்சியில் ஆட்சிக் கூடத்தின் பங்கை விவாதிக்கவும்.

# இடைக்கால இந்தியாவின் நகரங்கள்

வேளாண்மை - வாணிப வளர்ச்சி நகரங்களின் வளர்ச்சிக்கு வேகமூட்டியது. இடைக்காலத்தில் நகர மக்கள் தொகையில் பெரிய வளர்ச்சி உண்டானது. முன்பு மன்னர்களும், பிராமணர்களும், இராணுவ வீரர்களும் தான் நகரத்தின் முக்கிய மக்கட்பிரிவுகள். சுல்தான்கள் காலத்தில் தோல் பணியாளர்கள், சமையற்காரர்கள், நெய்பவர்கள் போன்ற பல்வேறு பிரிவினர் நகரங்களுக்குக் குடியேறினர். ஆக்ரா, லாகோர், டெல்லி, கான்டேஷ், அகமதாபாத், தாக்கா, தௌலதாபாத், பனாரஸ் ஆகியவை முக்கிய நகரங்களாக இருந்தன.

போரில் வெற்றிபெற்ற ஆட்சியளார்கள் போர்களில் கைது செய்த அடிமைகளை ஏராளமாக நகரங்களுக்குக் கொண்டு வந்தனர். இது நகர மக்கட்தொகையை அதிகரிக்கச் செய்தது. இவ்வாறு நகரங்களுக்கு வந்த மக்கட்பிரிவினர் வழியாகக் கைவினைத் தொழில்கள் வளர்ச்சியடைந்தது. நகரங்களிலுள்ள கைவினைப் பொருட்களின் முக்கிய உற்பத்தி மையங்களாயிருந்த கார்க்கானகளைக் குறித்து முன்வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? நகர மக்கட்தொகை அதிகரிப்புக்கேற்ப உற்பத்திகளின் தேவையும் அதிகரித்தது. நகரங்களுக்குக் கிராமிய உற்பத்திப் பொருட்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இது கிராமிய பொருளாதாரக் கொள்கையை வலுவடையச் செய்தது. கிராமங்கள் அல்லவா முக்கிய உற்பத்தி மையங்கள்.

இடைக்கால இந்தியாவில் நகரங்களுடையவும் மக்கட்தொகை யினுடையவும் வளர்ச்சிக்கு உதவிய காரணிகள் யாவை?



# இடைக்கால இந்தியச் சமூகம்

இடைக்கால இந்தியாவின் பொருளாதார நிலையைக் குறித்து நாம் இதுவரை விவாதித்தோம். இனி அக்காலத்திலுள்ள சமூகச் சூழல்களை ஆராய்வோம். இடைக்கால இந்தியச் சமுகத்தில் உயர்குலத்தோர். இடைக்குலத்தோர், தாழ்ந்த குலத்தோர் என மூன்று பிரிவினர் இருந்தனர்.




பெரும்பான்மையான மக்கள் விவசாயிகளாக இருந்தனர். நிலவுடைமையினர் பொதுவாகச் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தபோது பெரும்பான்மையினரான விவசாயிகளின் வாழ்க்கை இன்னல்நிறைந்ததாக இருந்தது. வரியின் சுமை அவர்களைப் பாதித்தது. சொந்தமாக நிலமோ, காளையோ, கலப்பையோ இல்லாதவர்கள் தான் பெரும்பான்மையான விவசாயிகளும், மொகலாயர் காலத்தில் வரலாற்றுக் குறிப்புகள் கூறும் தகவலின்படி குத்-கஷ்தா (Khud Kashta) பாகி-கஷ்தா (Pahi-Kashta) ஆகிய இருவகையிலான விவசாயிகள் இருந்தனர்.




மொகலாயர் காலத்தில் வேளாண்துறையில் உயர்ந்த பிரிவினர் ஜமீன்தார்களாயிருந்தனர். அவர்கள் பரந்த விளைநிலைங்களின் உடைமைகளாக இருந்தனர். அனால் அவர்கள் நேரடியாக வேளாண்மை செய்ததில்லை. சமூகத்தில் உயர்ந்த நிலையை வகித்த ஜமீன்தார்கள் ஆட்சியாளர்களுக்காக வரி

வசூலித்தனர். அவர்களுக்குச் சொந்தமாகக் கோட்டையும் இராணுவமும் இருந்தது. உயர்ந்த ஜாதியைச் சார்ந்த ஜமீன்தார்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தேஷ்முக், பாட்டீல், நாயக் ஆகிய பெயர்களில் அறியப்பட்டனர்.

இடைக்கால இந்தியச் சமூகம் சமுத்துவமின்மை நிறைந்ததாக இருந்தது – இக்கூற்றைப் பகுப்பாய்வு செய்யவும்.

## அடிமை முறை

இடைக்கால இந்தியச் சமூகத்தில் அடிமை முறை காணப்பட்டதாக அக்காலத்தில் இந்தியாவுக்கு வந்த பயணிகளின் குறிப்புகள் கூறுகின்றன. சி.இ. பதினான்காம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த இப்னு பத்தூத்தா என்பவர் அன்றைய டெல்லி ஆட்சியாளரான முகமது பின் துக்ளக்கிற்குப் பரிசளிக்க குதிரைகளையும், ஒட்டகங்களையும் அடிமைகளையும் வாங்கியதாகக் குறிப்பிடுகிறார். அரண்மனையிலுள்ள அடிமைகள் நடனத்திலும் இசையிலும் மேதைகளாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அடிமைக்களுக்காக குறிப்பிட்ட அடிமைச் சந்தைகள் இருந்தன. போரில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் தான் அடிமைகளில் பெரும்பான்மையினர். இதைத் தவிர ஆப்பிரிக்காவிலிருந்தும் அடிமைகளை இறக்குமதி செய்திருந்தனர்.


அடிமைமுறை – ஓவியரின் கற்பனையில்

## பெண்களின் நிலை

குழந்தைத் திருமணமும், சதியும் நாட்டின் பல பகுதிகளிலும் காணப்பட்டது. பதினேழாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பிரெஞ்சு பயணியான பிராங்கோயிஸ் பர்ணியர் சதிப் பழக்கத்தை நேரில் பார்த்தாகக் குறிப்பிடுகிறார். மறுமணம் செய்துகொள்வதற்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. பெண் குழந்தைகள் சிறுவயதிலேயே திருமணமாவதால் அவர்களுக்குக் கல்விக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. வேளாண்மை, வேளாண்மை சாராத துறைகளில் பெண்களின் பங்கு முக்கியமானதாக இருந்தது. விதை விதைப்பது முதல் அறுவடை செய்வது வரையிலான எல்லா நிலையிலும் அவர்கள் பங்காளிகளாயினர். நூல் நூற்பது, மண்பானை உருவாக்கம் ஆடை அலங்காரம் ஆகிய துறைகளிலும் அவர்கள் செயல்பட்டனர்.


வேலை செய்யும் பெண்கள் (அக்பர் நாமா)

உயர்ந்த அரசியல், சமூக பதவி வகித்த ஏராளமான பெண்கள் அக்காலத்தில் இருந்தனர். சுல்தானா ரசியாவும், மொகலாய சக்கரவர்த்தியான ஜகாங்கீரின் மனைவி நூர்ஜகானும், ஆட்சிப் பொறுப்பில் பெயர்பெற்ற பெண்களாவர். ஹீமாயூனின் சகோதரி குல்பதான் பீகம், ஜீஜாபாய் ஆகியோர் பல்வேறு பதவிகளை வகித்தோர் ஆவர்.



இடைக்கால இந்தியாவில் பெண்களின் பொதுநிலைமையைக் குறித்து குறிப்பு தயார் செய்க.

## ஜாதி முறை

முன்காலங்களைப் போன்று இடைக்காலத்திலும் ஜாதி அடிப்படையில் வேற்றுமைகள் காணப்பட்டது. பிராமணர்கள் சமூகத்தில் உயர்ந்த பதவிகளில் இருந்தனர். ஜாதிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட உயர்வு அன்றைய சிறப்பாகும். புதிய தொழில்கூடங்கள் நடைமுறைக்கு வந்ததும் இந்த தொழில்களில் ஈடுபடுவோரைத் தனி ஜாதிகளாகக் கணக்கிட்டனர். மொகலாய ஆட்சியாளரான பாபர் தொழில்கூடங்களையும் ஜாதிகளையும் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்துஸ்தானில் வேறொரு சிறப்பு என்பது வெவ்வேறு தொழில்களில் திறமையுள்ள ஏராளமான தொழிலாளிகள் இருந்தனர் என்பதாகும். ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டிருந்தவர்கள் ஒவ்வொரு ஜாதியில் உட்பட்டவர்களாக இருந்தனர். பரம்பரையாக இந்த தொழில்கள் புதிய தலைமுறைக்கு கைமாறினர். .... ஆக்ராவிலுள்ள எனது கட்டிட உருவாக்கச் செயல்களில் மட்டும் 680 கல்வேலை செய்பவர்கள் தினமும் வேலை செய்திருந்தினர். இவ்வாறு இந்துஸ்தானின் எல்லா இடங்களிலும் எண்ணற்ற தொழில்கூடங்கள் உள்ளன.

– பாபர் நாமா




வடஇந்தியாவைப் போன்று தொழில் அடிப்படையிலான ஜாதி வேற்றுமையே தென்னிந்தியாவிலும் நிலைநின்றது. தென்னிந்தியாவில் ஜாதிகளைப் பொதுவாக இடங்கை வலங்கை என இரண்டாகப் பிரித்திரிந்தனர். பொதுவாக வியாபாரம், கைத்தொழில் ஆகிய துறைகளில் ஈடுபடுவோர் இடங்கை ஜாதிகளாக அறியப்பட்ட போது வேளாண்துறையில் பணிபுரிவோர் வலங்கை ஜாதிகளாக அறியப்பட்டிருந்தனர்.

இடைக்கால இந்தியாவின் சமூக வாழ்க்கையைக் குறித்து விவாதித்து குறிப்பு தயாரிக்கவும்.

இடைக்காலத்தில் சிறந்த பொருளாதார வளர்ச்சியை கையடக்கிய நாடாக இந்தியா இருந்தது. பொருளாதாரத்துறையில் உருவான வளர்ச்சி கலை பண்பாடுத் துறையின் வளர்ச்சிக்கு உதவியது. இந்த செல்வச் செழிப்புதான் அக்காலத்தில் உருவான கோவில்களுடையவும், நினைவுச் சின்னங்ககடையவும் உருவாக்கத்துக்கு அடிப்படையானது. ஆனால் பொருளாதார வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட பிரிவிலுள்ள மக்கள் மட்டுமே அனுபவித்தனர். பெரும்பான்மையான மக்களும் வறுமையில் வாழ்ந்தனர்.

## செல்வமும், சமூகமும்

**பொருளாதாரக் கொள்கை**
↓
வேளாண் வளர்ச்சி
↓
கைத்தொழிலும், கைவினையும்
↓
வியாபாரமும், வாணிபமும்
↓
நாணய அமைப்பு
↓
நகரங்கள்

**சமூகம்**
↓
அடிமைமுறை
↓
பெண்களின் நிலை
↓
ஜாதிமுறை

## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- இடைக்கால இந்தியாவின் வேளாண் வளர்ச்சியை மதிப்பீடு செய்கின்றனர்.
- வேளாண் வளர்ச்சிக்காக ஆட்சியாளர்கள் கையாண்ட நடவடிக்கை களை விளக்குகின்றனர்.
- இடைக்கால இந்தியாவில் கைத்தொழில் கைவினைத் தொழில்கள் ஆகிய துறைகளில் உருவான வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- இடைக்கால இந்தியாவுடன் வாணிபத்தில் ஈடுபட்ட நாடுகளையும் அக்காலத்திலுள்ள துறைமுகங்களையும் அட்டவணைப்படுத்து கின்றனர்.

- இடைக்கால இந்தியாவில் நகரங்களுடையவும், நகர மக்கள் தொகை வளர்ச்சியினுடையவும் காரணமான சூழல்களை விளக்குகின்றனர்.
- இடைக்கால இந்தியாவின் சமூக அமைப்பின் முக்கியச் சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- இடைக்கால இந்தியாவின் சமூக வளர்ச்சிக்கு வேளாண்துறையின் வளர்ச்சி எவ்வாறு உதவியது? மதிப்பிடவும்.
- சுல்தான், மொகலாய காலங்களில் இந்திய மக்களின் முக்கிய வாழ்க்கை முறைகள் எவையென ஆராய்க.
- புதிய தொழில்நுட்பங்களின் கண்டுபிடிப்பு தொழில் – வேளாண்துறையின் முன்னேற்றத்தில் எந்த அளவு தாக்கம் செலுத்தியுள்ளது? பகுப்பாய்வு செய்க.
- வாணிப வளர்ச்சிக்காக இடைக்கால இந்தியாவின் ஆட்சியாளர்கள் கையாண்ட நடவடிக்கைகள் யாவை?
- இடைக்கால இந்தியாவின் இரு முக்கிய வாணிபப் பிரிவுகள் யாவை? அவர்கள் ஈடுபட்ட வியாபாரத் துறைகள் யாவை?
- இடைக்கால இந்தியாவில் விவசாயிகளின் வாழ்க்கையைக் குறித்து குறிப்பு தயாரிக்கவும்.
- இடைக்கால இந்தியாவின் சமூக- பொருளதாரச் சூழல்களில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது? ஆராயவும்.

## தொடர் செயல்பாடுகள்

- இடைக்கால இந்தியாவின் பொருளதார – சமூக சூழல்களைக் குறித்து கருத்தரங்கக் கட்டுரை தயாரித்து வெளியிடவும்.